வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 19.10.2024 சனிக்கிழமை இதழ் : 292 பக்கங்கள் : 12




# வரி செலுத்துவோர் தொகை 160 வீதத்தால் அதிகரித்தது!

கொழும்பு, ஒக்ரோபர் 19

**கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் வரி செலுத்த வேண்டியவர்களின் எண்ணிக்கை 160 வீதத்தால் அதிகரித்துள்ளதாக உள் நாட்டு இறைவரி திணைக்களம் அறிவித்துள்ளது.**

2023/2024 மதிப்பீட்டு ஆண்டுக்கான வரி செலுத்துவோர் எண்ணிக்கையில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு 8 இலட்சத்து 68 ஆயிரத்து 9 பேர் வருமான அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும். இது முந்தைய ஆண்டில் 3 இலட்சத்து 33 ஆயிரத்து 313 ஆக இருந்தது.

வணிகர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் சொத்து வைத்திருப்பவர்களை இலக்காகக் கொண்டு பதிவு முயற்சிகளை விரிவுபடுத்திய உள்நாட்டு வருமான சட்டத்தில் சமீபத்திய திருத்தங்கள் வரி செலுத்துவோர் வளர்ச்சிக்குக் காரணம்.

பல புதிய பதிவுகள் வரி செலுத்துவோர் அடையாள எண்களுடன் (ரி. ஐ. என்.) இணைக்கப்பட்டுள்ள தாக இறைவரி திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மாதம் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் அல்லது வருடம் 12 இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் ஈட்டுவோர் தங்கள் வருமான அறிவிப்பை ஒன்லைன் மூலம் இறைவரி திணைக்களத்தில் பதிவு செய்வது கட்டாயமானது என்பது தெரிந்ததே. (ஐ)

## ஈஸ்டர் தாக்குதல் பேரழிவில் அரசியல் செய்யவேண்டாம்!

### கத்தோலிக்க திருச்சபை கம்மன்பிலவிடம் கோரிக்கை

கொழும்பு, ஒக். 19

உதய கம்மன்பில உயிர்த்த ஞாயிறுதாக்குதல் பேரழிவுடன் அரசியல் செய்யக்கூடாது என கத்தோலிக்க திருச்சபையின் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்ணாண்டோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக

11

## பருப்பு, மாசி கருவாட்டுக்கு வரியை அதிகரித்தது அரசு

கொழும்பு, ஒக். 19

பருப்பு வகைகளுக்கு கிலோவுக்கு 25 சதமும் மாசி கருவாட்டுக்கு 302 ரூபாயும் வரியாக அறவிடப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

கடந்த 14ஆம் திகதி முதல் எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதி வரை நடைமுறைக்கு வரும்

11

## அடிப்படை உரிமைகளை கோரி இலங்கை ஏதிலிகள் போராட்டம்!



சென்னை, ஒக். 19

இந்தியாவின் திருச்சி மத்திய சிறைச்சாலை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் இலங்கை ஏதிலிகள், தங்களை விடுவிக்குமாறு வலியுறுத்தி போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

இந்தப் போராட்டம் நேற்று முன் தினம் காலை ஆரம்பிக்கப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

திருச்சி மத்திய

11

## வன்னி மாவட்டத்தில் வாக்கெடுப்பை நிறுத்தக் கோரி உயர்நீதிமன்றில் மனு!

கொழும்பு, ஒக். 19

பாராளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தின் வாக்களிப்பு நடவடிக்கைகளுக்கு இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை வழங்குமாறு சிறிரெலோ கட்சியின் செயலாளர் ப.உதயராசா தலைமையில் உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்காக வன்னி தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயக தேசிய கூட்டணி தாக்கல் செய்த வேட்புமனுவை நிராகரிப்பதற்கு மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி மேற்கொண்ட தீர்மானத்தை வலுவற்றதாக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரியே உயர் நீதிமன்றத்தல் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனநாயக தேசிய கூட்டணி கட்சியைச் சேர்ந்த வன்னி மாவட்ட வேட்பாளர் ப. உதயராசா மற்றும்

11

## சங்குப்பிட்டி ஊடான போக்குவரத்து மூன்று நாட்களுக்கு நிறுத்தப்பட்டது

### பாலத்தில் அவசர திருத்த வேலைகள்

கிளிநொச்சி,ஒக்.19

கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலத்தினூடாக கனரக வாகனப் போக்குவரத்து நேற்று மதியம் முதல் மூன்று நாட்களுக்கு நிறுத்தப்பட்டுள்ளது. பாலத்தில் அவசர திருத்த வேலைகள் நடைபெறவுள்ளதால் பாலத்தினூடாக கனரக வாகனங்களின் போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

இதேவேளை இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்ஸில் பயணிக்கும் பயணிகள் சில இடங்க ளில் பஸ்ஸில் இருந்து இறங்கி

11

## ஆலயத்தில் மின்சாரம் தாக்கி ஒருவர் மரணம்!

### அனலைதீவில் நேற்று துயரம்

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக். 19

ஆலயத்தின் ஒலிபெருக்கியில் பாடலை ஒலிபரப்ப மின்இணைப்பை ஏற்படுத்த முயன்றவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

இச்சம்பவம் அனலைதீவில் ஆலயம் ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது. இதில், அனலைதீவு 5ஆம் வட்டாரத்தை சேர்ந்த நடராசா துஷ்யந்தன் (வயது 37) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய

11

## விசேட தேவையுடையோர் வாக்களிக்க உதவியாளர்!

### தேர்தல்கள் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 19

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின்போது விசேட தேவையுடைய வாக்காளர்களுக்கு வாக்கெடுப்பு நிலையத்தில் வைத்து வாக்குச்சீட்டை அடையாளமிடுவதற்கு

11

## தமிழரின் வாக்குகள் தமிழ் தரப்புகளுக்கே!

### யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் வலியுறுத்து!



யாழ்ப்பாணம், ஒக். 19

தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தமது வாக்குகளை தமிழ் தரப்புகளுக்கு அளிக்க வேண்டுமே தவிர, மாறாக தென்னிலங்கை தரப்புக்கு அளிக்கக் கூடாது - என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

11

## கடன் பெறுவது பெரும் ஆபத்து!

### ஹர்ஷ டி சில்வா எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 19

அரச வருமானத்தை அதிகரிக்காமல் கடன் பெற்றுக் கொள்வது பாரிய ஆபத்தை விளைவிக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய அரசாங்கம் கடன் பெற்றுக்கொள்வது

11

## காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களிடம் விசாரணை!

கிளிநொச்சி, ஒக். 19

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் அவர்களின் உறவினர்கள் 30 பேரிடம் நேற்று வெள்ளிக்கிழமை பூர்வாங்க விசாரணை நடத்தப்பட்டது. காணாமல் போனோர் பற்றிய பணிமனை (ஓ. எம். பி.) இந்த விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

காணாமல் போனோர் பற்றிய

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

நண்பர் ஒருவர் முகநூலில் தான் படித்த ஒரு விடயத்தை அனுப்பியிருந்தார். அவர் ஊர்க் குருவியின் வாசகன் என்பதாலோ தெரியவில்லை, யாரோ ஒருவர் ஊர்க்குருவி பற்றி எழுதிய அந்தக் குறிப்பை அனுப்பியிருந்த போதிலும், அதனை யார் எழுதினார்கள் என்று குறிப்பிடவில்லை.

நிச்சயம் அது ஒரு தமிழ் அரசு கட்சிக்காரரால்தான் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

நண்பர் எனக்கு அனுப்பி வைத்ததற்கும் காரணம் இருக்கலாம். முதலில் அவர் அனுப்பிய அந்தக் குறிப்பை அப்படியே தருகின்றேன். அதனை எழுதிய நண்பரும் ஊர்க்குருவின் வாசகர் என்பதால் இதனையும் அவர் படிப்பார் என்று நம்புவோம்.

"தமிழரசை முடக்க வழக்குகள் வந்ததற்கு மாவையின் யாப்பு மீறல்களே காரணம் என்கிறது 'ஈழநாடு'. இதற்கு முன் யார்யாரோ மீதெல்லாம் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட போதெல்லாம் அமைதியாக இருந்த ஈழநாடு, இப்போது 'ஊர்குருவி' மூலம் மாவையின் யாப்பு மீறல்கள் தான் காரணம் என உண்மையைப் போட்டு உடைத்திருக்கிறது. இதனை முன்பு சுமந்திரன் சொன்னபோது பலர் பொங்கினார்கள். இப்போது அவர்களில் பலர் கட்சியை விட்டு வெளியேறி கட்சிக்கு எதிராகவே போட்டியிடுகிறார்கள். பதினான்கு வருடங்களாக கட்சி தவறிழைத்து வருவதாக வேறு குற்றஞ்சாட்டுகிறார்கள் - வேட்பாளர் நியமனம் வரை கட்சிக்குள் இருந்தவர்கள். இனியாவது இந்த உண்மையை ஏற்றுக் கொண்டு வழக்கை முடிவுக்கு கொண்டு வர ஒத்துழைப்பார்களா? மக்கள் சரியான தீர்ப்பை வழங்குவார்கள் என நம்புவோம்." - நண்பர் அனுப்பி வைத்த குறிப்பு இதுதான்.

இதனை எழுதியவர், கடைசியாக ஊர்க்குருவி எழுதிய அந்தப் பத்தியைத்தான் படித்திருக்கிறார் என்று நினைக்க முடிகின்றது.

மாவை யாப்புக்கு விரோதமாக பொதுச்சபைக்கு ஆட்களை நியமித்தமைதான் இத்தனை பிரச்னைக்கும் காரணம் என்பது அவர் சொல்வதுபோல சரியானதாவே இருக்கலாம். ஆனால், இந்தப் பிரச்னை தலையெடுத்த காலங்களில் ஊர்க்குருவி எழுதிய எதனையும் இவர் படிக்கவில்லை என்று தெரிகின்றது.

தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்சபைக்கு தொகுதிக் கிளைகளிலிருந்து பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்றிருப்பதற்கு பதிலாக, பிரதேச சபைகள் மட்டத்தில் பிரதிநிதிகள் உள்வாங்கப்பட்டமைதான் பொதுச்சபையின் உறுப்பினர்கள் இரண்டு மடங்காக அதிகரிக்கக் காரணம். அதுவே, கட்சி நீதிமன்றம் செல்லக் காரணம். ஆனால், அப்படி தவறுதலாக பொதுச் சபைக்கு உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனர் என்பதைத் தெரிந்துகொண்டுதான் சுமந்திரனும் சிறிதரனும் தலைவர் பதவிக்கு போட்டியிடுவதற்கான பிரசாரத்தை பொதுச்சபை உறுப்பினர்கள் மத்தியில் மேற்கொண்டனர். சிறிதரன் அதனைத் தெரிந்து கொண்டு செய்தாரா என்பதற்கு அப்பால், நிச்சயமாக சுமந்திரன் தெரிந்து கொண்டுதான் தேர்தலை எதிர்கொண்டார். அதனால் தான், சிறிதரன் தெரிவுசெய்யப்பட்ட போதிலும் தலைவராக பதவியேற்க முடியாமல் இருந்தபோது, சிறிதரனுக்கு பகிரங்கமாக எழுதிய கடிதத்தில், "பொதுச் சபைக்கு பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்ட முறை கட்சி யாப்புக்கு விரோதமானது", என்பது பற்றியு குறிப்பிட்டிருந்தார். அதிகம் ஏன், திருகோணமலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலும் அந்தக் கடிதம் பற்றி வழக்காளி குறிப்பிட்டிருந்தார்.

மாவை யாப்புக்கு முரணாக ஆட்களை நியமித்தமை பற்றி குறிப்பிட வேண்டி வந்தது, அவர் தனது இராஜிநாமா கடிதத்தை சிறிதரனுக்கு அனுப்பியது பற்றி எழுதுகின்றபோது இதனையும் உசாத்துணையாக சேர்க்கவேண்டி வந்ததே தவிர, அதுதான் வழக்குக்கு பாய்வதற்கு காரணம் என்பதாலோ அல்லது அது குறித்தும் மாவை மீது குற்றம் சுமத்துவதற்காகவோ அல்ல.

தமிழ் அரசுமீது வழக்கு வந்ததற்கு மாவையின் யாப்பு மீறல் காரணமாக இருந்தாலும் அது வந்த நேரமும் முறைமையும் திட்டமிடப்பட்டவை என்பதை யாரும் நிராகரிக்க மாட்டார்கள்.

அந்தத் தலைவர் தேர்தலில் சிறிதரன் வெற்றிபெறாமல், சுமந்திரன் வெற்றி பெற்றிருந்தால், இப்போதும் பொதுச் சபைக்கு தவறாக இணைக்கப்பட்டவர்கள் பொதுசபையில் இருந்துகொண்டுதான் இருப்பார்கள். அல்லது யாப்பு என்றாலும் மாற்றப்பட்டு பொதுச் சபையின் தற்போதைய உறுப்பினர்கள் உத்தியோகபூர்வமாக உள்வாங்கப்பட்டிருப்பார்கள்.

**- ஊர்க்குருவி.**

## பாராளுமன்றத் தேர்தல் குறித்து யாழில் முன்னாயத்த செயலமர்வு



யாழ்ப்பாணம், ஒக். 19

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல்கள் தொடர்பாக கிராம அலுவலர்களுக்கான முன்னாயத்த செயலமர்வு யாழ்ப்பாண தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இங்கு கருத்து வெளியிட்ட தெரிவித்தாட்சி அலுவலர்,

இக் கலந்துரையாடல் ஒரு பின்னூட்டலாகவே நடைபெறுகிறது. ஜனாதிபதித் தேர்தல் கடமைகளில் கற்றுக் கொண்ட பாடங்களுக்கமைய நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல்கள் கடமைகளில் வினைத்திறனான பங்களிப்பை வழங்க வேண்டும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் செல்லுபடியற்ற வாக்குகள் அதிகமாக விருந்தது. எனவே, வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு செயல்பாடுகளை பிரதேச செயலக ரீதியாக வெளிக்கள உத்தியோகத்தர்கள் மூலம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதால் அதற்கான ஒத்துழைப்பையும் கிராம அலுவலர்கள் வழங்க வேண்டும்.

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக வாக்களிப்பு நிலையங்களில் கிராம அலுவலகர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உதவி தேர்தல் ஆணையாளர் இ. கி. அமல்ராஜ் விளக்கமளித்தார்.

இச் செயலமர்வில் அனைத்து கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் கலந்து கொண்டனர். (ஐ)


## தேசிய உதைபந்தாட்ட அணியில் மகாஜனவின் 3 வீராங்கனைகள்!

யாழ்ப்பாணம், ஒக். 19

தெற்காசிய மகளிர் உதைபந்தாட்ட வெற்றிக் கிண்ணத் தொடரில் பங்குபற்றும் இலங்கை பெண்கள் தேசிய அணியில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரியின் முன்னாள் உதைபந்தாட்ட வீராங்கனைகள் மூவர் இடம்பிடித்து சாதனை படைத்துள்ளனர்.

பாஸ்கரன் சானு, சிவநேசன் தர்மிகா, சுரேந்திரன் கௌரி ஆகியோரே இந்த அணியில் இடம்பிடித்துள்ளனர். இந்தத் தொடர் நேபாளத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

அணியில் இடம் பிடித்த 3 வீராங்கனைகளும் மகாஜன கல்லூரியில் கல்வி கற்றபோது பாடசாலை அணிகளுக்குத் தலைமை தாங்கியதுடன் தேசிய மட்டத்திலும் சிறப்பாக செயல்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)




## ஒன்றரை மாத குழந்தை யாழில் திடீர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ்ப்பாணத்தில் பிறந்து 45 நாட்களேயான பெண் குழந்தை ஒன்று நேற்று முன்தினம் உயிரிழந்தது.

கொடிகாமம் - தவசிகுளத்தை சேர்ந்த துசியந்தன் டனுசியா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், கடந்த 16ஆம் திகதி குழந்தைக்கு சுகயீனம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, பெற்றோர் குழந்தையை சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

மேலதிக சிகிச்சைக்காக நேற்று முன்தினம் குழந்தை யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. எனினும், குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.


குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். குழந்தையின் இறப்புக்கான காரணம் கண்டுபிடிக்கப்படாத நிலையில் உடல்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ)

## சங்கானையில் கடும் காற்றால் வீட்டின் கூரை தூக்கி வீசப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 19

மழையுடன்கூடிய கடும்காற்றால் வீட்டின் கூரை தூக்கி வீசப்பட்டது. இதில், ஒரே குடும்பத்தை சேர்ந்த இருவர் பாதிப்படைந்துள்ளனர் என்று யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி. என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அராலி தெற்கு ஜே/162 கிராம சேவகர் பிரிவில் உள்ள வீடு ஒன்றின் கூரை தூக்கி வீசப்பட்டது. அத்துடன், வீட்டுக்குள் வெள்ளமும் புகுந்தது. இதனால், அவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.



(ஐ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
19.10.2024 சனிக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ரணிலின் 'விசேடசெய்தி'

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன் தினம் நாட்டு மக்களுக்கு ஒரு 'விசேட செய்தி' யை வெளியிட்டார். அவர் செய்தியை வெளியிடவிருக்கிறாரென முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்த காரணத்தால் ஓர் எதிர்பார்ப்பு இருந்தது என்னவோ உண்மைதான். ஜனாதிபதித் தேர்தலுக்கு பிறகு ஒரு மாதம் நிறைவடைவதற்கு நான்கு நாட்கள் முன்னதாக அவரின் அறிக்கை வந்திருக்கிறது. முன்னைய ஜனாதிபதித் தேர்தல்களில் தோல்வி கண்ட வேட்பாளர் எவரும் இவ்வாறு நாட்டு மக்களுக்கு விசேட செய்தியை விடுத்தனரென நாம் அறியவில்லை.

தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுர குமார திஸநாயக்க ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களின்போது விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளை கர்ணகடூரமாக கண்டித்துப் பேசிய போதிலும் ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு அதே கொள்கைகளையே பின்பற்றுகிறாரென்றும் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு விமர்சனங்களை செய்வது சுலபம் ஆனால், பதவியில் அமர்ந்த பிறகுதான் அவர் அரசாங்கத்தை நடத்துவதில் இருக்கக்கூடிய சிக்கல்களை புரிந்துகொள்ள தொடங்கியிருக்கிறார் எனவும் எவ்வளவு காலத்துக்கு அவரால் சமாளிக்க முடியும் என்றும் ஒரு மாதம் கடந்துவிடுவதற்கு முன்னதாகவே எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் பேச ஆரம்பித்து விட்டார்கள்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் பொருளாதார நெருக்கடியையும் அதன் விளைவான மக்கள் கிளர்ச்சியையும் சமாளிக்க முடியாமல் விக்கிரமசிங்கவின் உதவியை நாடியதுபோன்று மீண்டும் ஒரு சூழ்நிலை தோன்றலாம் என்றும் அவரின் சேவை மீண்டும் நாட்டுக்கு தேவைப்படும் எனவும் அவரைச் சார்ந்தவர்கள் பகிரங்கமாக பேசுகிறார்கள்.

விக்கிரமசிங்கவும் தனது செய்தியில் இன்னும் நான்கு வருடங்களில் வெளிநாட்டு கடன்களை திரும்பிச் செலுத்தத் தொடங்கும்போது அரச வருவாயை அதிகரிப்பதில் அரசாங்கம் பெரிய சவாலை எதிர்நோக்க வேண்டிவரப்போகிறது என்றும் அதனால் அடுத்த பாராளுமன்றத்தில் பொருளாதார பிரச்னையைக் கையாளக்கூடிய அனுபவமும் திறமையும் கொண்டவர்களும் பொறுப்பைத் தட்டிக்கழிக்காதவர்களும் இருப்பது அவசியம் என்றும் கூறியிருக்கிறார்.

பொருளாதாரத்தை மீட்டெடுக்க கடந்த இரு வருடங்களாக தன்னுடன் சேர்ந்து பணியாற்றியவர்களை மீண்டும் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யவேண்டும் என்பதே முன்னாள் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு கூறிய "விசேட செய்தி" என்பதை புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. நிதித்துறை அதிகாரத்தைக் கொண்ட பாராளுமன்றம் உறுதியானதாக இருப்பதற்கு மக்கள் 'எரிவாயு சிலிண்டர்' சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்று இறுதியில் விக்கிரமசிங்க வெளிப்படையாகவே வேண்டுகோள் விடுத்தார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது எந்தக் கட்சிக்கும் பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பலம் கிடைப்பது சாத்தியமில்லை என்றும் கூறியிருக்கும் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் தன்னை ஆதரித்தவர்களின் அணிக்கான முதல் பிரசார நடவடிக்கையாகவே இந்த அறிக்கையை வெளியிட்டார் அவ்வளவுதான். விசேடம் எதுவுமில்லை.

தேசிய மட்ட தடகளம்:

## கோலூன்றி பாய்தல் போட்டியில் மகாஜன கல்லூரிக்கு தங்கம்





கொழும்பு, ஒக். 19

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தடகள போட்டி 2024 கொழும்பு சுகதாஸ விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமானது. இந்தப் போட்டிகள் எதிர்வரும் 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இதில், நேற்று நடந்த போட்டியில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி ஒரு தங்கப் பதக்கத்தைப் பெற்றது.

ச. உசாந்தன் 20 வயது பிரிவில் கோலூன்றி பாய்தலில் 4.30 மீற்றர் உயரத்தைத் தாண்டி தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார். (ஐ)

## யாழ். தெரிவத்தாட்சி அலுவலருடன் பொலிஸ் அத்தியட்சகர் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ்ப்பாண தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபனும் யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லூஸன் சூரிய பண்டாரவும் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நடந்த இந்த சந்திப்பில், நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல்கள் தொடர்பான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் மற்றும் இன்றைய தினம் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய மற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகளுடனான கலந்துரையாடல் ஏற்பாடுகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இச் சந்திப்பில் உதவித் தேர்தல் ஆணையாளர் இ. கி. அமல்ராஜ், யாழ்ப்பாண பொலிஸ் தலைமைப்பீட பொறுப்பதிகாரி சம்லி பலுசேன உடனிருந்தார்கள். (ஐ-05)

## யாழ். மாவட்ட பொலிஸார் வேட்பாளர்களுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் யாழ்ப்பாண பொலிஸாருக்கும் இடையே கலந்துரையாடல் நடைபெற்றது.

யாழ். பொலிஸ் நிலைய மாநாட்டு மண்டபத்தில் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டார தலைமையில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது பேசப்பட்ட விடயங்கள் வருமாறு,

பாராளுமன்றத் தேர்தல் காலங்களில் ஏற்படும் பிரச்னைகள் மற்றும் வன்முறைகளை தடுக்கும் முகமாக குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.


யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களின் உறுப்பினர்களை உள்ளடக்கிய 51 பேர் கொண்ட குழு அமைக்கப்படவுள்ளது.

இந்தக் குழுவில் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸ் சார்பில் 7 உறுப்பினர்களையும் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் சார்பில் 44 உறுப்பினர்களும் என மொத்தமாக 51 உறுப்பினர்களை கொண்ட குழு அமைக்கப்படவுள்ளது.

மேலும், தேர்தல் பிரசார இடங்களுக்கு அனுமதி கோரல், ஒலிபெருக்கி சாதனங்களை பயன்படுத்தும் கால அளவுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இதில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறீமோகன், பொலிஸ் உத்தியோகத்தர்கள், அரசியல் கட்சி மற்றும் சுயேச்சை வேட்பாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

ஒக்ரோபர் - 19 சனிக்கிழமை
குரோதி வருடம் - ஐப்பசி 02
நல்ல நேரம் : 03.02 - 04.32
ராகு காலம் : 09.02 - 10.32
திதி : துதியை




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும்.

**இடபம்**
மறைமுக விமர்சனங்களும் தாழ்வுமனப்பான்மையும் வந்துச்செல்லும். உறவினர் நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும்.

**மிதுனம்**
கடந்த கால இனிமையான அனுபவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**கடகம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத் தில் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப்போய் முடியும். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் நிதானம் தேவைப்படும் நாள்.

**துலாம்**
உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். சகோதர வகையில் நன்மை உண்டு. கல்யாண பேச்சுவார்த்தை வெற்றிய டையும். வாகனத்தை சரி செய்வீர்கள்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் சுப விஷயங்களில் கலந்து கொள்வீர்கள். அரசு காரியங்கள் நல்ல விதத்தில் முடியும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் கிடைக்கும்.

**தனுசு**
புதிய முயற்சி யாவும் வெற்றி அடையும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். அனாவசிய செலவை கட்டுப்படுத்துவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மகரம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாயாருக்கு கை, கால் வலி சோர்வு வந்து நீங்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**கும்பம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு.

**மீனம்**
குடும்பத்தில் நிம்மதி உண்டு. இழுபறியாக இருந்த வேலை முடியும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உறவினர்களால் ஆதாயமும் உண்டு.

# மதுபானசாலை அமைப்பதற்கு எதிராக முல்லையடிப் பகுதியில் ஆர்ப்பாட்டம்!

கிளிநொச்சி, ஒக். 19

கிளிநொச்சி, பளை முல்லையடிப் பகுதியில் மதுபான சாலை அமைப்பதற்கு எதிராக பிரதேச மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இதேவேளை, முல்லையடி பகுதியிலிருந்து பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் வரை சென்ற மக்கள், தமது கோரிக்கை அடங்கிய மகஜரை பிரதேச செயலாளரிடம் கையளித்தனர்

# விளையாட்டு கட்டடத் தொகுதி வவுனியாவில் திறந்து வைப்பு





வவுனியா, ஒக். 19

வவுனியா ஓமந்தையில் சர்வதேச தரத்திலான விளையாட்டுக் கட்டட தொகுதி நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த 2015 ஆம் ஆண்டு சுமார் 16 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட சர்வதேச தரத்திலான விளையாட்டு கட்டட தொகுதியானது நீண்ட கால மாக அபிவிருத்திப் பணிகள் இடைநிறுத்தப்பட்டு காணப் பட்டது.

இந்த நிலையில் கடந்த அரசாங்க காலத்தில் மீளவும் நிதி ஒதுக்கப்பட்டு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இதன் பிரகாரம் குறித்த கட்டடத் தொகுதியில் உள்ளக விளையாட்டு அரங்கு மற்றும் நீச்சல் தடாகம் என்பன மேலும் சுமார் 14 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு முழுமையாக 30 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு நேற்று உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் விளையாட்டுத் துறை அமைச்சின் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர், பேராசிரியர் ரியல் அட்மிரல் செமால் பெர்னாண்டோ, உதவிப் பணிப்பாளர் கே. டபிள்யூ. டி. கே. கொஸ்தா மற்றும் வவுனியா அரசாங்க அதிபர் பி. எஸ். சரத் சந்திர ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டு கட்டடத் தொகுதியை திறந்து வைத்தனர்.(எ)

# நாவலர் மண்டபத்தில் இன்று வாணி விழா

யாழ்ப்பாணம், ஒக். 19

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் சிறீலசிறீ ஆறுமுகநாவலர் சற்கைகள் நிலையம், ஆறுமுக நாவலர் அறநெறி பாடசாலையும் இணைந்து நடத்தும் வாணி விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீல சிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க வேதாந்தமடம் சிறீ சிவகுருநாத குரு பீட எட்டாவது குருபீடாதிபதி சிறீ வேதவித்தியாசாகரர் சுவா மிகள் ஆசியுரை வழங்க, வேலணை பிரதேச உதவி பிரதேச செயலாளர் கணேசமூர்த்தி பார்த் தீபன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மாணவர்களின் கலை நிகழ்வுகள், ஆசியுரை, தலைமையுரை, பிரதம விருந்தினர் உரையை அடுத்து மாணவர்களுக்கு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளது. (ஐ)

# மன்னார் கட்டுக்கரை குளத்தின் கீழ் 31, 339 ஏக்கரில் பெரும்போக செய்கை

## கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்

மன்னார், ஒக். 19

மன்னார் கட்டுக்கரை குளத்தின் கீழ், 31 ஆயிரத்து 339 ஏக்கரில் பெரும்போக செய்கையை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் கட்டுக்கரை குளத்தின் கீழான, பெரும்போக நெற்செய்கை தொடர்பான கூட்டம் நேற்று உயிலங்குளத்தில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், பிரதேச செயலாளர்கள், அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள் மற்றும் 30 விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், அதிகாரிகள் பங்கேற்றனர்.

இதன்போது முன்வைக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக பயிர்ச் செய்கைக்கு என உத்தேசிக்கப்பட்ட நிலப்பரப்பாக இந்த வருடம் 31 ஆயிரத்து 339 ஏக்கரில் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த வருட பெரும்போக விவசாய தயார்ப்படுத்தலுக்காக எதிர்வரும் 27 ஆம் திகதி முதலாவது கட்ட நீர் விநியோகம் செய்யப்படவுள்ளது.

விதைப்புக்கான இறுதித் திகதியாக எதிர்வரும் 4 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

நான்கரை மாத நெற்களுக்கான விதைப்பை 7 ஆம் திகதிக்கு முன்பாகவும்,

3 தொடக்கம் மூன்றரை மாத நெல்லினங்களை, எதிர்வரும் நவம்பர் மாதம் 26 ஆம் திகதிக்கு முன்பாகவும்,

இரண்டரை மாத நெல்லினத்தை விதைக்க விரும்புபவர்கள், நவம்பர் மாதம் 26 ஆம் திகதிக்கு முன்பாகவும் விதைப்பை மேற்கொள்ளுமாறு, அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் 27 ஆம் திகதி முதல், கட்டுக்கரை குளத்தின் கீழ் விவசாயம் செய்வோரில் நீர் தேவைப்படுகிறவர்களுக்கு நீர் விநியோகம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, 2025 மார்ச் மாதம் 11 ஆம் திகதி அறுவடை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், பெரும்போக நெற் செய்கையை கருத்தில் கொண்டு, கால்நடைகளை கட்டுப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாளை 20 ஆம் திகதி முதல் 2025 ஏப்ரல் 22 வரை, பெரும் போக பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் பகுதிக்குள் கால்நடைகளை விட வேண்டாமென கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பெரும்போக செய்கைக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை விடுத்து, அத்துமீறி நீர்ப்பாசனக் குளங்களுக்குச் சொந்தமான காணிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் 108 வாகனங்களை காணவில்லை!

கொழும்பு, ஒக். 19

**இலங்கை சிவில் பாதுகாப்பு திணைக்களத்துக்கு சொந்தமான 108 வாகனங்கள் தற்போது அங்கு இல்லை என இலங்கைத் தேசிய தணிக்கை அலுவலகம் வெளியிட்டுள்ள கணக்காய்வு அறிக்கையில் வெளிவந்துள்ளது.**

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில், சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 128 வாகனங்கள் காணப்படும் நிலையில், அதில் 108 வாகனங்கள் தொடர்பில் எதுவித ஆதாரங்களும் தணிக்கை அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

இதேவேளை, சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் போக்குவரத்து மற்றும் கணக்குப் பிரிவு ஆகியவற்றில் உள்ள 444 வாகனங்களில் 82 வாகனங்கள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படவில்லை.

அவ்வாறு பதிவு செய்யப்படாத வாகனங்களின் மதிப்பு 140,135,000 ரூபாய் ஆகும்.

சிவில் பாதுகாப்பு திணைக்களம் தொடர்பாக 2023 ஆம் ஆண்டுக்கான செயல்திறன் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தணிக்கை அறிக்கையில் இந்தத் தகவல் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாட்டில் பல வைத்தியசாலைகளில் கதிரியக்க பரிசோதனை முடக்கம்!

கொழும்பு, ஒக். 19

அரசாங்க வைத்தியசாலையில் காணப்படும் மருத்துவ சேவை உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையால் இலங்கையில் 8 இற்கும் மேற்பட்ட வைத்தியசாலைகளில் கதிரியக்க பரிசோதனை சேவைகள் தடைப்பட்டுள்ளதாக சுகாதார தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த அரசாங்கத்தில் துணை மருத்துவ சேவைக்கு தேவையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வது இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக சிரி ஸ்கானர் மற்றும் எம்.ஆர்.ஐ ஸ்கானர் உள்ளிட்ட பல பரிசோதனைகளை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அதன் செயலாளர் சானக தர்மவிக்ரம சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் அதிகளவில் பணிச் சுமையை சுமக்க வேண்டியுள்ளதால் கடும் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர்.

எனவே, இந்த சேவைகளில் உள்ள வெற்றிடங்களுக்கு உடனடியாக ஆட்சேர்ப்பு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல்லாவிட்டால், அடுத்த சில மாதங்களில் பணியாளர்கள் பற்றாக்குறையால் சுகாதார சேவை கடுமையாக பாதிக்கப்படும் - என்றார். (அ)

# பாதுகாப்புச் செயலரை சந்தித்த அமெ. தூதுவர்!

கொழும்பு, ஒக். 18

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், பாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தாவை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பு பாதுகாப்பு அமைச்சில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பான பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இலங்கை விமானப் படைக்கு புதிய விமானமொன்றை நன்கொடையாக வழங்கியமைக்காக பாதுகாப்புச் செயலாளர் இதன்போது நன்றி தெரிவித்துள்ளார். (அ)

# காலி பூஸா சிறைச்சாலைக்குள் போதைப்பொருள் கைப்பற்றல்

கொழும்பு, ஒக். 19

காலி பூஸா சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது, போதைப்பொருள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படைக்கு கிடைத்த தகவலை அடுத்து, இந்த சோதனை இடம்பெற்றது.

சிறைச்சாலை கூண்டினுள், மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 4 கிராம் 300 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் என்பன கைப்பற்றப்பட்டன. (அ)

எல்பிட்டிய உள்ளூராட்சி தேர்தல்

# மாற்று விரலில் மை பூசுவதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானம்

கொழும்பு, ஒக். 19

எல்பிட்டி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், வாக்களித்ததனை உறுதிப்படுத்தும் வகையில் வாக்காளரின் இடது கை பெரு விரலில் அடையாளம் இடப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற நிலையில், வாக்களிப்பின் போது வாக்காளரின் இடது கை சிறுவிரலில் அடையாளம் இடப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் சிறுவிரலில் இடப்பட்ட மை, இன்னும் சிலருக்கு நீங்காத நிலையில், தற்போது ஏற்படக்கூடிய குழப்பங்களைத் தவிர்க்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# வெள்ள எச்சரிக்கை நீக்கம்!

கொழும்பு, ஒக். 19

களனி கங்கை மற்றும் அத்தனகல்லு ஓயாவை அண்மித்த பகுதிகளுக்கு விடுக்கப்பட்ட அனைத்து வெள்ள அபாய எச்சரிக்கைகள் நீக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் கடும் மழை காரணமாக கடந்த 11 ஆம் திகதி முதல் குறித்த பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

நாடு முழுவதும் பெய்யும் மழை நிலைமைகளால் முக்கிய ஆறுகளின் நீர் மட்டங்களை தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், தேவையானால் வெள்ளம் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து முன்னெச்சரிக்கைகள் மற்றும் தகவல்களை வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் நீர்ப்பாசனத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

# தபால் மூல வாக்களிப்பு 5 நாட்கள் இடம்பெறும்!

## 750,000 பேர் விண்ணப்பம்

கொழும்பு, ஒக். 19

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக 7 இலட்சத்து 50 ஆயிரம் தபால் மூல விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பவர்களுக்கான வாக்காளர் பட்டியல் அத்தாட்சிப்படுத்தல் நடவடிக்கை இடம்பெற்றதுடன் தபால் மூல வாக்குச்சீட்டுகள் எதிர்வரும் 23ஆம் திகதி தபாலிடல் பணிகளுக்காக கையளிக்கப்படவுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு 5 நாட்கள் இடம்பெறவுள்ளன.

இதன்படி, பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு மாவட்ட செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்களில் எதிர்வரும் 30ஆம் திகதியும் அடுத்த மாதம் 4ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் ஏனைய அரச நிறுவனங்களிலும் இராணுவ முகாம்களிலும் அடுத்த மாதம் முதலாம் திகதியும் 4ஆம் திகதியும் தபால் மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

குறித்த தினங்களில் வாக்களிக்க முடியாதவர்களுக்காக அடுத்த மாதம் 7ஆம் 8ஆம் திகதி வாக்களிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. (அ)

# யானைகள் மோதியதில் ரயில் தடம் புரண்டது!

கொழும்பு, ஒக். 19

ஹிங்குரக்கொட பகுதியில் காட்டு யானைகள் மோதியதில், எரிபொருளை ஏற்றிச் சென்ற ரயில் ஒன்று தடம் புரண்டுள்ளதுடன், இரண்டு காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன.

காட்டு யானைகள் மோதியதில் மூன்று எரிபொருள் தாங்கிகள் மற்றும் ஏனைய பெட்டிகளுடன் இயந்திரம் தடம் புரண்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

விபத்து காரணமாக மட்டக்களப்பு ரயில் பாதையில் ரயில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாகத் ரயில்வே திணைக்களம் தெரிவிக்கின்றது. (அ)

# மேல் மாகாணத்தை அச்சுறுத்தும் டெங்கு!

## இவ்வருடத்தில் இதுவரை 20 மரணங்கள் பதிவு

கொழும்பு, ஒக். 19

மேல் மாகாணத்தில் தற்போது அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற நிலையில், ஒக்ரோபர் மாதம் ஆரம்பித்து தற்போது வரை 1,618 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 41 ஆயிரத்து 29 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தற்போது 17 ஆயிரத்து 416 நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், யாழ். மாவட்டத்தில் 4 ஆயிரத்து 822 நோயாளர்களும், கண்டி மாவட்டத்தில் 4 ஆயிரத்து 266 நோயாளர்களும், கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தில் 4 ஆயிரத்து 159 நோயாளர்களும் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 20 மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# கடந்த 15 நாட்களில் 63ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாவிகள் இலங்கைக்கு!

கொழும்பு, ஒக். 19

இந்த ஆண்டின், ஒக்ரோபர் மாதத்தின் முதல் 15 நாட்களில், 63 ஆயிரத்து 491 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்து 18 ஆயிரத்து 78 சுற்றுலாப் பயணிகளும்,

சீனாவில் இருந்து 4 ஆயிரத்து 504 சுற்றுலாப் பயணிகளும்,

பிரித்தானியாவில் இருந்து 4 ஆயிரத்து 495 சுற்றுலாப் பயணிகளும், நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

ஜேர்மனி, ரஷ்யா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இருந்தும், அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

அந்தவகையில், ஒக்ரோபர் மாதத்தில், ஒரு இலட்சத்து 55 ஆயிரத்து 70 சுற்றுலாப் பயணிகள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள், 15 இலட்சத்து 48 ஆயிரத்து 299 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அவர்களில், இந்தியாவில் இருந்து 3 இலட்சத்து 4 ஆயிரத்து 634 பேரும், பிரித்தானியாவில் இருந்து ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 959 பேரும், ரஷ்யாவில் இருந்து ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து 701 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவிச்சையை வெட்டத்தவறியதால் மரத்தையே அடியோடு அழித்துவிட்டது

## அதிலிருந்த கடைசி மாங்கனியை விருட்சமாக்குவது மக்களது பொறுப்பு என்கிறார் ஈ.சரவணபவன்

யாழ்ப்பாணம், ஒக். 19

"கடந்த பாராளுமன்றத் தேர்தலின்போது இலங்கைத் தமிழர சுக் கட்சியில் போட்டியிடும் குருவிச்சையை வெட்டுங்கள் என்று மக்களிடம் கோரியிருந் தேன். மக்கள் அதைச் சரிவரச் செய்யவில்லை. அதன் விளைவு, அது முழு மரத்தையுமே விழுங்கிவிட்டது. அந்த மரத்திலிருந்து வீழ்ந்த கடைசி மாங்கனி நாங்கள். இதை விருட்சமாக்கிப் பாதுகாப்பது மக்கள் கையிலேயே இருக்கின்றது."

இவ்வாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், மாம்பழச் சின்னத்தில் சுயேச்சையாகப் போட்டியிடும் ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பின் மூத்த வேட்பாளருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அருகிலுள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலின்போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் நான் போட்டியிட்டேன். அப்



போது பத்திரிகையாளர் சந்திப்பில் என்னிடம் ஒரு கேள்வி எழுப்பப்பட்டது. எமது கட்சியில் போட்டியிடும் ஒரு வேட்பாளரின் பெயரைக் குறிப்பிட்டு அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக கருத்துக்களை முன்வைக்கின்றார். தமிழ்த் தேசிய நீக்கத்தில் ஈடுபடுகின்றார். பின்னர் எப்படி உங்கள் கட்சிக்கு மக்கள் வாக்களிப்பது என்று கேட்டார்கள். நான் அவர்களுக்கு தெளிவான பதிலை வழங்கினேன். மரத்தில் குருவிச்சை இருந்தால் குருவிச்சையைத்தான் வெட்ட வேண்டுமே தவிர, மரத்தையல்ல என்று பதிலளித்தேன்.

தமிழரசுக் கட்சி என்ற மரத்திலிருந்த குருவிச்சையை வெட்டச் சொல்லி கடந்த தேர்தலில் மக்களிடம் கோரினேன். மக்கள் அதைச் செய்யத் தவறிவிட்டார்கள். எப்போதும் அசலை விட நகல் நல்லது போன்றுதான் தெரியும். அதனால்தான் என்னவோ மக்கள் குருவிச்சையை சரியாக அடையாளம் காணத் தவறிவிட்டார்கள்.

அதனால் இன்று அந்தக் குருவிச்சை மரத்தையே விழுங்கிவிட்டது. மரம் இருந்த தடம் தெரியாமல் குருவிச்சையே வியாபித்து நிற்கின்றது. அந்த மரத்திலிருந்து வீழ்ந்த கடைசி மாங்கனியே நாங்கள். இந்த மாங்கனி தமிழ் மக்கள் விரும்பும் மாற்றத்துக்கான விதையை வைத்திருக்கின்றது. இதை விருட்சமாக்கவேண்டியது மக்கள் பொறுப்பு.

மீண்டும் எங்கள் மக்களிடம் தாழ்மையாகக் கேட்பது ஒன்றுதான். 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் இழைத்த தவறை மீண்டும் இழைக்க வேண்டாம். இம்முறையாவது உங்களுக்கு மரம் செழிப்பாக வளர்ந்து பலன் தரவேண்டும் என்றால், இந்த மாங்கனியின் விதையை விருட்சமாக்க வேண்டும். குருவிச்சைக்கு வாக்களிக்காமல், உங்கள் இதயத்திலிருக்கும் இந்த மாங்கனிச் சின்னத்துக்கு வாக்களியுங்கள் - என்றார். (அ-05)



# நல்லூரில் பிரசாரத்தை ஆரம்பித்தது முன்னணி

யாழ்ப்பாணம், ஒக். 19

தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்திலிருந்து பிரசாரப் பணிகளை ஆரம்பித்தனர்.

தியாக தீபத்தின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, சுடரேற்றி வணக்கம் செலுத்திய பின்னர் பிரசார நடவடிக்கைகளை அவர்கள் ஆரம்பித்தனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஸ் உட்பட கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்த பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டனர். (அ-05)

# மன்னாரில் தமிழ் அரசு கட்சி தேர்தல் அலுவலகம் திறப்பு

மன்னார், ஒக். 19

பாராளுமன்ற தேர்தலுக்கான தமிழரசு கட்சியின் மன்னார் மாவட்டத்திற்கான பிரதான கட்சி அலுவலகம் நேற்று முன் தினம் மாலை, மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. தமிழரசு கட்சி வேட்பாளர் சட்டத்தரணி செல்வ ராஜ் டினேஸனால் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவும், கட்சி சார்ந்த தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் குறித்த காரியாலயம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழரசு கட்சியின் இளைஞர்களுக்கான கூட்டமும் மன்னார் தனியார் விடுதியில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள தேவன்பிட்டி, வட்டகண்டல், வெள்ளிமலை, சாந்திபுரம், தலைமன்னார், பேசாலை, முருங்கன் உள்ளடங்களாக பல கிராமங்களை சேர்ந்த இளைஞர்கள் குறித்த ஒன்றுகூடலுக்கு வருகை தந்து தங்களது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் நிகழ்வில் கலந்து கொண்டு பாராளுமன்றத் தேர்தலுக்கான ஆதரவை வேட்பாளர் சட்டத்தரணி செல்வராஜ் டினேஸனுக்கு வழங்கியிருந்தார். (அ)

# தமிழ்த் தேசிய கூட்டணியின் பெண் வேட்பாளர்கள் யாழ். வணிகர் கழகத்தினருடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 19

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியில் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும்




வன்னி மாவட்ட முன்னாள் போராளியான கருணாநிதி யசோதினி, யாழ்ப்பாண மாவட்ட பெண் வேட்பாளர் சசிகலா ரவிராஜ் ஆகியோர், யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் தலைவர் இ.ஜெயசேகரத்துடன் கலந்துரையாடினர். இதன் போது எதிர்வரும் தேர்தலில் பெண் வேட்பாளரின் முக்கியத்துவம், பெண்களை அரசியலில் ஈடுபடுவதன் நோக்கம் மற்றும் பெண்கள் ஏன் அரசியலில் ஈடுபட வேண்டும் என்பது பற்றி கலந்துரையாடப்பட்டன.

இதன்போது கட்சியின் ஆதரவாளர்கள், போராளிகள் நலம்புரிச் சங்க தலைவர் எஸ்.ஈஸ்வரன், தமிழ் தேசிய செயற்பாட்டாளர் குழுமம், முன்னாள் போராளிகள், யாழ்ப்பாண வணிகர் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (அ)

# ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் அறிமுகம் பருத்தித்துறையில்

யாழ்ப்பாணம், ஒக். 19

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் வைத்தியர் சி.சிவகுமாரை வரவேற்கும் நிகழ்வு நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் இடம்பெற்றது.

பருத்தித்துறை சிவன் ஆலயத்தில், விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்ற பின்னர், ஆதரவாளர்களால் மலர் மாலை அணிவித்து, வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதன் பின்னர், வடமாராட்சி ஊடக இல்லத்தில் ஊடக சந்திப்பு இடம்பெற்றது. (அ)

# இரு நாட்டு மீனவர் பிரச்னை; 29ஆம் திகதி கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஒக். 19

இலங்கை - இந்திய மீனவர் பிரச்னை தொடர்பில் இரு நாடுகளின் அரசாங்கங்களுக்கு இடையிலான கலந்துரையாடலொன்று எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கு முன்னதாக அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் அறிவதற்காக ஜனாதிபதி அனுரகுமார திஸநாயக்கவை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட் பாளர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வும் தேர்தல் பிர சாரக் கூட்டமும் கிளிநொச்சி பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட கிராஞ்சி பகுதியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# மதத் தலைவர்களை நேற்று சந்தித்த தமிழ் மக்கள் கூட்டணி வேட்பாளர்கள்!





யாழ்ப்பாணம், ஒக். 19

தமிழ் மக்கள் கூட்டணியின் பாராளுமன்ற தேர்தல் வேட்பாளர்கள் மதத் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடி ஆசீர்வாதம் பெற்றுள்ளனர்.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமை யில் தமிழ் மக்கள் கூட்டணி கட்சி தனித்து யாழில் போட்டியிடுகிறது.

இதற்கமைய கட்சியின் முதன்மை வேட்பாளரான மணிவண்ணன் தலைமையில் போட்டியிடும் வேட்பாளர்கள் நல்லூர் ஆதீன குருமுதல்வர் மற்றும் யாழ்.ஆயர் உள்ளிட்ட மதத் தலைவர்களைச் சந்தித்தனர்.

இதன்போது தேர்தல் நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடியதுடன் மதத் தலைவர்களிடம் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து கட்சியின் தேர்தல் பிரசார பணிகளை முழு வீச்சில் முன்னெடுக்க உள்ளதாக சட்டத்தரணி மணிவண்ணன் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கவுடன் கூட்டணி அமைத்தமையே கட்சி பிளவுபடுவதற்கு முக்கிய காரணம்!

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 19

**ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டணி அமைத்தமை தம்முடைய கட்சி பிளவுபடுவதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளதாக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

**கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெறுவதற்கான அனைத்து தயார்படுத்தல்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நான் தேசிய பட்டியலின் ஊடாக போட்டியிடவுள்ளேன். கட்சி என்ற வகையில் எம்முடைய வேட்பாளர்களை வெற்றியடையச் செய்வது என்னுடைய கடமையாகும்.

ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டணி அமைத்தமை எம்முடைய கட்சி பிளவு படுவதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. ஆனால் அப்போதும் நாம் நாட்டுக்காக எடுக்கவேண்டிய முடிவை சிறந்த முறையில் எடுத்தோம். நாட்டில் அரசியல் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கையை நாம் முன்னெடுத்தோம்.

ராஜபக்ஷர்களின் அரசியல் பயணம் நிறைவடையப் போகின்றதா? இல்லையா என்ற விடயத்தை மக்களே தீர்மானிப்பர். நாம் இதற்கு முன்னரும் கூட தோல்வி அடைந்திருக்கின்றோம். மொட்டுக்கட்சி சார்பாக தற்போது புதிய தரப்பினரே களமிறக்கப்பட்டுள்ளனர். ஆட்சியை கைப்பற்றுவதற்காக நாம் எந்த சந்தர்ப்பத்திலும் கொள்கையை விட்டுக் கொடுக்கப் போவதில்லை - என்றார். (அ)

# நாட்டை மீண்டும் கடன் சுமைக்குள் தள்ளும் நடவடிக்கையில் அநுர அரசு

## திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 19

நாட்டை மீண்டும் கடன் சுமைக்குள் தள்ளும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி, கம்பளையில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அநுர குமார திசாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்று 570 பில்லியன் ரூபா கடன் பெற்றுக் கொண்டுள்ளார். அதேபோன்று மேலும் 200 மில்லியன் டொலர் கடனை வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொள்வதற்கான பேச்சு வார்த்தைகளும் இடம்பெறுகின்றன.

நாட்டை கடன்சுமைக்குள் தள்ளமாட்டோம் என உறுதியளித்தவர்கள் இன்று அந்த செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார்கள். இந்தளவு பாரிய கடன் எதற்காக பெற்றுக் கொள்ளப்படுகிறது என நான் கேட்க விரும்புகிறேன். இந்தக் குறுகிய காலத்தில் மக்களும் இவ்வாறான கேள்விகளை முன் வைக்கிறார்கள்.

நாட்டில் திருடர்களை கைதுசெய்வதற்காகவே ஆட்சியமைக்கப்போவதாக மக்கள் விடுதலை முன்னணியினர் தெரிவித்தார்கள். ஆனால் அதன்படி எதுவும் இடம்பெறவில்லை.

நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்வோம் என நாம் உறுதியளித்தோம். அடுத்த பாராளுமன்றத்தில் அங்கம் வகித்து நாம் எமது உறுதிமொழியை நிறைவேற்றுவோம் - என்றார். (அ)

# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கைகளை உடனடியாக வெளிப்படுத்துங்கள்

## நிமல் லான்சா கோரிக்கை



கொழும்பு, ஒக். 19

கத்தோலிக்க திருச்சபை மற்றும் கத்தோலிக்க மக்களை ஏமாற்றாமல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கைகளை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும். அவற்றில் ஏதேனும் குறைபாடுகள் அல்லது பிழைகள் இருந்தால் அவை தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார்.

நீர்கொழும்பில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மிகவும் உணர்ச்சிகரமான விடயமாகும். எனவே அந்த தாக்குதல்கள் தொடர்பான கத்தோலிக்க மக்கள் ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவை நம்புகின்றனர். எனவே அந்த நம்பிக்கையை அவர் பாதுகாக்க வேண்டும். ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டைப் பொறுப்பேற்ற போது அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாத நிலை இருந்தது.

ஆனால், அவர் பதவியேற்ற பின்னர், அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டது. நல்லாட்சியின்போதும் சம்பளம் அதிகரிக்கப்பட்டது. ஊதிய முரண்பாடுகளைக் களைய குழுக்கள் நியமிக்கப்பட்டன.

ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சம்பளத்தை அதிகரிக்க வுள்ளதாக முன்னர் மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்தது. ஆனால் தற்போது தாம் சம்பள அதிகரிப்பை வழங்குவதாகக் கூறவில்லை என்று அவர்கள் மறுக்கின்றனர்.

சுமார் 80 சதவீத அரச ஊழியர்கள் தேசிய மக்கள் சக்திக்கே வாக்களித்தனர். எனவே அவர்களை இந்த அரசாங்கம் ஏமாற்றக்கூடாது - என்றார். (அ)

# தமிழ் முற்போக்குக் கூட்டணியின் வெற்றியை யாரும் தடுக்கமுடியாது

## கூறுகிறார் பழனி திகாம்பரம்



கொழும்பு, ஒக். 19

நான் அரசியலுக்கு வந்து 20 ஆண்டுகள் ஆகின்றன. ராதாகிருஷ்ணன் அரசியலுக்கு வந்து 30 ஆண்டுகள் ஆகின்றன. இது வரை காலமும் நாம் செய்துள்ள சேவைகளை மக்கள் அறிவார்கள். எனவே எமது வெற்றியை யாராலும் தடுக்க முடியாது என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஹற்றன் கோல்டன் மஹால் மண்டபத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தமிழ் முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர்களான இராதாகிருஷ்ணன் எம். உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்ட இந்த கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

நடைபெற உள்ள பாராளுமன்றத் தேர்தல் முக்கியமான ஒன்றாகும். நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்காக எத்தனையோ சுயேச்சைக் குழுக்கள் களத்தில் இறங்கியுள்ளன. அதேபோல் மக்களுக்கு அறிமுகம் இல்லாதவர்கள் எல்லாம் அரசியல் கட்சிகளில் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளார்கள். அவர்களில் இதுவரை காலமும் மக்களுக்கு சேவை செய்தவர்கள் யார், அவர்களுக்கு பிரச்னைகள் ஏற்பட்டபோது உடனிருந்து உதவியவர்கள் யார், எதிர்காலத்தில் அவர்களுக்கு உதவப் போவது யார் என்று மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

இந்த தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் தொழிலாளர் தேசிய சங்கமும் மக்கள் முன்னணியும் ஒற்றுமையாக இணைந்து தேர்தலில் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றோம். இந்த மாவட்டத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணி வெற்றி பெறுவதை யாராலும் தடுக்க முடியாது. அதற்கான பிரசார நடவடிக்கைகளை நாம் கொண்டு வருவதோடு முறையாக சேவை செய்த எங்களுக்கு மக்கள் வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

நன்கு சேவை செய்யக்கூடிய வேட்பாளர்களுக்கு வாக்களித்து பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். அப்போதுதான் உண்மையான சேவைகளை பெற்றுக் கொள்ள முடியும் - என்றார். (அ)

# கடந்த வாரம் 200 மில்லியன் டொலர் கடன் உதவி கிடைக்கப்பெற்றுள்ளது!

## தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் சதுரங்க

கொழும்பு, ஒக். 19

கடன் நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக அரசாங்கம் கடந்த வாரம் உலக வங்கியிடமிருந்து 200 மில்லியன் டொலர் கடனை பெற்றுக்கொண்டுள்ளதாக, தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சதுரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த வாரம் 200 மில்லியன் டொலர் பணத்தை அரசாங்கம் உலக வங்கியிடமிருந்து கடனாக பெற்றுள்ளது. வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்காகவே சர்வதேச நாணய நிதியத்தை போன்று உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன 650 மில்லியன் டொலர் கடனை வழங்க தயாராகவுள்ளது.

கிடைக்கப்பெறவிருந்த பணமே தற்போது எமக்கு கிடைக்கவுள்ளது. அந்த பணம் வழங்கப்படாமல் போனால் தேசிய மக்கள் சக்தியினருக்கு சர்வதேச தொடர்பை பேண முடியவில்லை என்பர். கடன் பிரச்னையை நிவர்த்தி செய்யும் நோக்கில் எம்முடைய பாதையிலேயே தான் நாம் பயணித்துக்கொண்டுள்ளோம்-என்றார்.

# தொழிற்சங்க பிரதிநிதிகள் பாராளுமன்று செல்வதில் எந்தவித தவறுமே கிடையாது!

## ரவி குமுதேஷ் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக். 19

"தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பாராளுமன்றுக்குள் உள்வாங்கப்படுவதில் எந்தவித தவறும் இல்லை" என ஐக்கிய ஜனநாயக் குரல் கட்சியின் ஊடகப்பேச்சாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொரோனாத் தொற்று காலப்பகுதியில் கோட்டாபய ராஜபக்ஷ முன்னெடுத்த வேலைத்திட்டங்களையும் சரியென ஏற்றுக்கொண்ட சமூகத்திற்கு மத்தியில் நாம் அதனை ஏற்றுக்கொள்ள வில்லை.

அதனை சவாலுக்கு உட்படுத்தினோம். கோட்டாபய ஆட்சிக்கு வந்த நாள் முதல் அவர் முன்னெடுத்த வேலைத் திட்டங்களை நாம் சவாலுக்கு உட்படுத்தினோம். ஊழல் மோசடிகளை நாம் வெளிச்சத்துக்கு கொண்டுவந்தோம்.

ஊழல் மோசடிகளை சுட்டிக்காட்ட எவரும் முன்வராத சந்தர்ப்பத்தில் நாம் பகிரங்கமாகவே அவற்றை தெரிவித்திருந்தோம். சுகாதார பிரச்னை விவகாரத்தில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் ஒருவர் சிறைக்கு செல்லும்வரை நாம் போராடினோம்.


நாம் தொழிற்சங்கவாதிகளாக எமது கடமைகளை சரிவர செய்துள்ளோம். எமக்கு நம்பிக்கை உள்ளது. நாட்டில் நல்லமாற்றங்களை ஏற்படுத்துவதற்கு குரல் கொடுத்த நாம் அடுத்த கட்டத்திற்கு சென்று மாற்றத்தினை கொண்டுவர முடியும் என நம்புகின்றோம்- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தலில் வேறுவிரலில் மை பூசப்படும்

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு





காரைதீவு, ஒக். 19

**ஜனாதிபதித் தேர்தலில் பூசிய மை சிலவேளை அழியாமலிருக்கலாம். அதற்காக எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வேறொரு கை விரலில் மை பூசப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் சிந்தக உடகம தெரிவித்தார்.**

தேர்தல்கள் ஆணைக்குழுவும் தகவல் தொடர்பாடல் அமைச்சும் இணைந்து அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வை நேற்று வெள்ளிக்கிழமை அம்பாறையில் நடத்தியது.

அம்பாறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த செயலமர்வில் அம்பாறை அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம தனமை வகித்தார்.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன், உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கசுன் அத்தநாயக்க மற்றும் தகவல் தொடர்பாடல் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் திலகரத்ன, நீதிக்கும் புலனாய்வுக்குமான மேலதிக ஆணையாளர் குலரத்ன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"ஊடக தர்மத்துடன் தேர்தலை அணுக வேண்டும். வாக்குச்சாவடிக்குள் எந்தக் காரணம் கொண்டும் புகைப்படமோ வீடியோவோ எடுக்க முடியாது. வெளியில் அதனை செய்யலாம். ஐந்து பேருக்கு உட்பட்டவர்கள் வேட்பாளர் இல்லாமல் பிரசார நட்வடிக்கையில் வீடு வீடாக செல்லலாம். வேட்பாளர் புகைப்படம் தரித்த வாகனத்தில் வேட்பாளர் கட்டாயம் இருக்க வேண்டும்"- என்றும் குறித்த செயலமர்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## 2ஆம் மொழி பயிற்றுவிக்கும் திட்டம் காரைதீவில் ஆரம்பம்

காரைதீவு, ஒக். 19

காரைதீவு பிரதேச செயலக நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் அரச கரும மொழிகள் திணைக் களத்தின் அனுமதியைப் பெற்று இரண்டாம் மொழி - சிங்கள பயிற்சி நெறியானது அரச அலுவலர்களுக்காக

நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.


இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார் .

காரைதீவு பிரதேச செயலாளர் கணேசமூர்த்தி அருணன், உதவிப் பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன் மற்றும் நலன் புரிச்சங்க செயலாளர் செ. கஜேந்திரன் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.





## திண்மக் கழிவகற்றல் வாகனங்களை துரிதமாக திருத்துவதற்கு நடவடிக்கை



கல்முனை, ஒக். 19

கல்முனை மாநகர சபையில் பழுதடைந்துள்ள திண்மக் கழிவகற்றல் சேவை வாகனங்களை துரிதமாக திருத்தி முடிக்குமாறு மாநகர ஆணையாளர் என். எம். நௌபீஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்முனை மாநகர சபையின் திண்மக் கழிவகற்றல் சேவைக்குரிய வாகனங்களில் ஒரு கொம்பெக்டர் மற்றும் 04 உழவு இயந்திரங்கள் உட்பட 06 வாகனங்கள் பழுதடைந்திருக்கின்ற நிலையில் அவை திருத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

எனினும் குறித்த வாகனங்களின் திருத்த வேலைகள் தாமதமடைவதால் திண்மக் கழிவகற்றல் சேவையை முன்னெடுப்பதில் பெரும் அசௌகரியங்கள் ஏற்படுவதாக மாநகர சபையின் சுகாதார பிரிவினர், மாநகர ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இதையடுத்து வாகனங்கள் திருத்தும் தளத்துக்கு நேற்றுக் காலை சென்று கண்காணிப்பை மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்த பின்னரே சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் இயந்திர திருத்துநர்களுக்கு ஆணையாளர் இவ்வாறு பணிப்புரை விடுத்தார்.

இதன்போது வாகனங்களை திருத்தி முடிப்பதில் நிலவும் தாமதத்துக்கான காரணங்களை கேட்டறிந்து கொண்ட ஆணையாளர், அவற்றைத் துரிதமாக திருத்தி சேவையில் ஈடுபடுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். இவற்றுக்குத் தேவையான உதிரிப்பாகங்களைத் துரிதமாக கொள்வனவு செய்து வழங்குமாறும் திருத்துநர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆணையாளர் அறிவுறுத்தினார்.

இதன்போது கல்முனை மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர் பி. ரி. எம். நஹீம், சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் டிலிப் நௌஷாட் உள்ளிட்டோரும் பிரசன்னமாகியிருந்தனர்.(எ)

## 5,000 பனம் விதைகள் நடும் திட்டம் ஆரம்பம்

காரைதீவு, ஒக். 19

அம்பாறை மாவட்டத்தில் இயற்கை வளங்களை பாதுகாக்கும் நோக்கில் 5,000 பனம் விதைகளை நடும் திட்டம் புதன்கிழமை பனங்காட்டில் முதற் கட்டமாக ஆரம்பமாகியது.

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் அதன் இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரன் தலைமையில் ஆலையடி வேம்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பனங்காடு தில்லையாற்று பகுதியில் முதற் கட்டமாக 1200 பனம் விதைகள் நடப்பட்டன.

இதில், திட்ட இணைப்பாளர் திருமதி அனிதா செல்வகுமார், களப்பணியாளர் திருமதி நிஷாகரி பிரதீபன், ஆலையடிவேம்பு பிரதேச செயலக சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் யு. எல் மஷ்ரூதா, திருமதி எஸ். ஜனனி, அபிவிருத்தி உத்தியோகர் திருமதி பிருந்தாயினி, பனங்காடு சிறு குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பனம் விதைகளை நடுகை செய்தனர். (எ)

## கிழக்கு மாகாண ஆளுநருடன் கடற்படைத் தளபதி சந்திப்பு




திருகோணமலை, ஒக். 19

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரவுக்கும் கிழக்கு கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் டேமியன் பெர்னாண்டோவுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கிழக்கு கடற்படைத் தளபதி, புதிய ஆளுநருக்கு முதலில் வாழ்த்து தெரிவித்து சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

கிழக்கு மாகாணம் சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் வாழும் பெரும் கரையோரப் பிரதேசமாக இருப்பதால், அந்த மாகாணத்தில் உள்ள கடல் பாதுகாப்பு மற்றும் மீனவர்களின் பாதுகாப்பு குறித்து இந்தச் சந்திப்பின்போது ஆராயப்பட்டது. (எ)





வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு சிறீ திரௌபதி அம்மன் ஆலய வனவாசம் சடங்கு நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை நடைபெற்ற போது..... படங்கள்- வி. ரி. சகாதேவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதிகளுக்கு எதிரான போர் இன்னும் ஓயவில்லை!

## இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு திட்டவட்டம்



டெல்அவிவ், ஒக். 19

**"ஹமாஸ் மற்றும் ஈரான் ஏவிவிட்டுள்ள பயங்கரவாதிகளுக்கு எதிரான எங்களின் போர் இன்னும் முடிவடையவில்லை"- என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.**

இதேவேளை, "ஈரான் கட்டமைத்த பயங்கரவாத அச்சு சரிகிறது", என்று ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வர் கொல்லப்பட்டமையை சுட்டிக்காட்டி நெதன்யாகு கருத்து வெளியிட்டுள்ளார்.

மத்திய கிழக்கு பகுதியிலுள்ள இஸ்ரேல், பலஸ்தீனம் இடையே நீண்டகாலமாக மோதல் நீடிக்கிறது.

இந்த நிலையில், காஸாவில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வர் கொல்லப்பட்டார்.

இது குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வெளியிட்டுள்ள வீடியோ செய்தியில், "ஈரான் கட்டமைத்த பயங்கரவாதத்தின் அச்சு சரிந்து வருகிறது. ஹிஸ்புல்லா தலைவர் நஸ்ரல்லா கொல்லப்பட்டார். பின்னர் அவருக்கு அடுத்த நிலையில் இருந்த மோஷன், ஏற்கனவே இஸ்மாயில் ஹனியாவும் கொல்லப்பட்டார். ஹமாஸ் இராணுவத் தலைவர் முகமது டெய்பை வீழ்த்தினோம். ஈரான் தனது சொந்த மக்கள் மீதும், அண்டை நாடுகளான ஈராக், சிரியா, லெபனான், ஏமன் மக்கள் மீது செலுத்தும் பயங்கரவாதத்தின் படியும் முழுமையாக விரைவில் முடிவுக்கு வரும். ஈரான் தலைமையிலான தீவிரவாத அச்சுறுத்தலை முடிவுக்குக் கொண்டு வந்து மாறுபட்ட எதிர்காலத்தை உருவாக்க எங்களுக்கு மிகப்பெரிய வாய்ப்பு கிட்டியுள்ளது.

யஹ்யா சின்வர் கொல்லப்பட்டதன் மூலம் இந்தப் போரில் மிக முக்கிய இலக்கை நாங்கள் எட்டியுள்ளோம். மிகப் பெரிய யூத இனப் படுகொலைக்குப் பின்னர் எங்கள் மக்களின் மீது மோசமாக தாக்குதலை நடத்தியவரின் கணக்கைத் தீர்த்துள்ளோம்.

இருப்பினும் ஹமாஸ் மற்றும் ஈரான் ஏவிவிட்டுள்ள பயங்கரவாதிகளுக்கு எதிரான எங்களின் போர் இன்னும் முடிவடையவில்லை. கடினமான நாட்கள் இன்னும் இருக்கின்றன. இறுதியில் நாங்கள் நிச்சயம் வெல்வோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.(எ)

# இஸ்ரேல் தாக்குதலில் ஹமாஸ் தலைவர் பலி

## டி. என். ஏ. பரிசோதனையில் உறுதி



டெல்அவிவ், ஒக். 19

காஸாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வர் உயிரிழந்தமை டி. என். ஏ. பரிசோதனையில் உறுதியானது.

காஸாவில் நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக வியாழக்கிழமை முக்கிய பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். அதில் ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வரும் ஒருவர் என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இறந்தவரின் பற்கள், கைரேகை இரண்டும் பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்ட நிலையில், அவை ஹமாஸ் தலைவர் யஹ்யாவின் டி. என். ஏ.உடன் சந்தேகத்துக்கு இடமின்றி ஒத்துப் போவதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தனது எக்ஸ் பக்கத்தில் வீடியோ வெளியிட்டுள்ள இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, "தீயசக்திகளுக்கு கிடைத்த பலத்த அடி" என்று மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். (எ)

# "காஸாவில் போர் நிறுத்தம்"

வாஷிங்டன், ஒக். 19

"ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வர் கொல்லப்பட்டதன் மூலம் காஸாவில் போர் நிறுத்தம் ஏற்படும்"- என்று அமெரிக்க துணை ஜனாதிபதியும் ஜனநாயக கட்சியின் வேட்பாளருமான கமலா ஹாரிஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அத்தோடு, "இது இஸ்ரேலுக்கு ஒரு நல்ல நாள்" என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஓராண்டாக யஹ்யா சின்வர் பொது நிகழ்ச்சிகள் எதிலும் கலந்து கொள்ளவில்லை. அவர் குறித்த தகவல்களும் வெளியாகவில்லை என இஸ்ரேல் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. மேலும், யஹ்யா கொல்லப்பட்டமை எதேச்சையான நிகழ்வுதான் என்றும், இது உளவுத்துறை வழங்கிய தகவலின் படி நடந்த தாக்குதல் அல்ல என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

1980களில் ஹமாஸ் இயக்கத்தில் இணைந்த யஹ்யா, அதன் இராணுவப் பிரிவில் ஒரு முக்கிய அங்கமாக இருந்து வந்தார். கடந்த ஜூலையில் ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவராக இருந்த இஸ்மாயில் ஹனியே தெஹ்ரானில் இஸ்ரேல் இராணுவத்தால் கொல்லப்பட்டபிறகு ஹமாஸின் புதிய தலைவராக யஹ்யா பொறுப்பேற்றுக்கொண்டார்.

# ஹசீனாவுக்கு பிடியாணை




டாக்கா, ஒக். 19

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு அந்த நாட்டு குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

பங்களாதேஷில் இட ஒதுக்கீடுக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தில் வன்முறை வெடித்தது. இதனால் பிரதமர் பதவியை இராஜிநாமா செய்த ஷேக் ஹசீனா நாட்டை விட்டு வெளியேறினார்.

இந்த நிலையில், ஷேக் ஹசீனா உள்ளிட்ட 45 பேருக்கு எதிராக நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. ஷேக் ஹசீனாவை எதிர்வரும் நவம்பர் 18ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்த குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ)

# உக்ரைனுக்கு எதிரான போரில் 10 ஆயிரம் வடகொரிய வீரர்கள்



பிரஸ்ஸல்ஸ், ஒக். 19

உக்ரைனுக்கு எதிரான போரில் 10 ஆயிரம் வடகொரிய வீரர்களை ஈடுபடுத்த ரஷ்யா திட்டமிட்டுள்ளது என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி குற்றஞ்சாட்டியுள்ளார்.

பெல்ஜியம் நாட்டின் பிரஸ்ஸல்ஸ் நகரில் நடந்த ஐரோப்பிய யூனியன் தலைவர்களுக்கான உச்சி மாநாட்டில் ஜெலென்ஸ்கி கலந்து கொண்டார்.

அப்போது, ரஷ்யாவுக்கு எதிரான போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான தன்னுடைய வெற்றி திட்டத்துக்கு ஆதரவளிக்கும்படியும் அவர் வலியுறுத்தினார்.(எ)

# பிரான்ஸில் வெள்ளப்பெருக்கு

பாரிஸ், ஒக். 19

பிரான்ஸ் நாட்டில் கனமழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. அங்குள்ள 6 நகரங்களுக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டின் மூன்றாவது பெரிய நகரமான லியோன், திரைப்பட விழா நடைபெறும் கான் உள்ளிட்ட நகரங்களும் இந்தப் பட்டியலில் அடங்கும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனரென அதிகாரிகள் தெரிவித்தனர். அத்தோடு நாட்டின் 18 பகுதிகளுக்கு ஒரேஞ்ச் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (எ)

# தாய்வான் விவகாரத்தை இந்தியா விவேகமாக கையாள வேண்டும்

## சீனா மறைமுக மிரட்டல்



பீஜிங், ஒக். 19

தாய்வான் விவகாரத்தை இந்தியா எச்சரிக்கையுடன் விவேகமாகவும் கையாள வேண்டும் என்று சீனா மறைமுகமாக மிரட்டியுள்ளது.

சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்த தாய்வான் 1949இல் தனிநாடாக பிரிந்தது. ஆனால், தாய்வானை தங்கள் நாட்டின் ஒரு பகுதி என்று சீனா உரிமை கொண்டாடி வருகிறது. இதற்கு தாய்வான் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இந்தச் சூழலில், அண்மையில் இந்தியாவின் மும்பை நகரில் தாய்வானின் பொருளாதார மற்றும் கலாசார மைய அலுவலகம் திறக்கப்பட்டது. ஏற்கனவே புதுடில்லி மற்றும் சென்னையில் தாய்வானின் அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ள நிலையில், 3ஆவதாக மும்பையில் புதிய அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சீனாவின் வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் மாவோ நிங் கூறுகையில், "உலகில் ஒரே சீனாதான் இருக்கிறது. அந்த சீனாவின் ஓர் அங்கமாக தாய்வான் உள்ளது. சீனாவுடன் தூதரக உறவு வைத்துள்ள நாடுகள், தாய்வானுடன் அலுவலக உறவை ஏற்படுத்துவதை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.

தாய்வான் விவகாரத்தை இந்தியா விவேகமாகவும், எச்சரிக்கையாகவும் கையாள வேண்டும். இந்தியா - சீனா இடையிலான உறவில் பாதிப்பு ஏற்படும் வகையில், தாய்வானுடன் இந்தியா அலுவலக ரீதியாக தொடர்பு வைக்கக்கூடாது என வலியுறுத்துகிறோம். இது குறித்து இந்திய தரப்புக்கு எங்கள் நிலைப்பாட்டை தெரிவித்திருக்கிறோம்"- என்றார். (எ)

# பாலிக்கு செம்மொழி அந்தஸ்து

## பிரதமர் மோடி பெருமிதம்



புதுடில்லி, ஒக். 19

பாலி மொழிக்கு செம்மொழி அந்தஸ்து கிடைத்துள்ளது புத்தரின் மகத்தான பாரம்பரியத்தை உலகுக்கு எடுத்துரைக்க உதவும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

புத்தரின் போதனைகளை போற்றும் சர்வதேச அபிதம்மம் திவஸ் நிகழ்ச்சியில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"தொன்மையான பாலி மொழிக்கு செம்மொழி அந்தஸ்தை மத்திய அரசு வழங்கியுள்ளது. இது, புத்தரின் மகத்தான பாரம்பரியத்தை உலகுக்கு எடுத்துக்காட்ட உதவும். அதேநேரம், சுதந்திரத்துக்குப் பிறகு ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சி இந்தியாவின் கலாசார பாரம்பரியத்தை போற்றாமல் புறக்கணிப்பு செய்ததை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

இன்றைய புவிசார் அரசியல் சூழ்நிலையில் புத்தரிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய உள்ளன. அதன்படி போரை விலக்கி அமைதிக்கான பாதையை உருவாக்குவதில் அனைத்து நாடுகளும் கவனம் செலுத்த வேண்டும்"- என்றார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கை அசத்தல் வெற்றி

## ரி - 20 தொடரை கைப்பற்றியது




தம்புள்ளை, ஒக். 19

இலங்கை - மேற்கு இந்திய தீவுகள் அணிகள் இடையிலான மூன்றாவது மற்றும் கடைசி ரி - 20 போட்டியில் இலங்கை அணி 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

தம்புள்ளை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கு இந்திய தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன்படி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 162 ஓட்டங்கள் சேர்த்தது. பொறுப்புடன் விளையாடிய அந்த அணியின் தலைவர் ரோமன் பவல் 37 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதிரடியாக விளையாடிய மோதி 15 பந்துகளில் 32 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இலங்கை அணி சார்பில் தீக்ஷனா, ஹசரங்க தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

இதையடுத்து, 163 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணி களமிறங்கியது. தொடக்க ஜோடி அதிரடியாக ஆடியது. முதல் விக்கெட்டுக்கு 60 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் பதும் நிஸ்ஸங்க 39 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். குசால் மெண்டிஸ், குசால் பெரேரா அதிரடியாக விளையாடி அரைச்சதம் கடந்தனர். இறுதியில் இலங்கை அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 166 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. அத்துடன் ரி - 20 தொடரை 2 - 1 என இலங்கை கைப்பற்றியது. (எ)

# வெறும் 46 ஓட்டங்களுக்கு சுருண்டு இந்திய அணி மோசமான சாதனை



பெங்களூரு, ஒக். 19

நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 46 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது இந்திய அணி. 11 துடுப்பாட்ட வீரர்களில் இருவர் மட்டுமே இரு வரிசை இலக்க ஓட்டங்களை எட்டினர். விராட் கோலி உட்பட் 5 துடுப்பாட்டு வீரர்கள் ஓட்டம் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தனர். சொந்த மண்ணில் இந்திய அணி டெஸ்ட் கிரிக்கெட்டில் எடுத்துள்ள குறைந்தபட்ச ஓட்டமாக இது அமைந்தது. இது ஆசிய மண்ணில் பதிவு செய்யப்பட்ட குறைந்தபட்ச ஓட்டமாகவும் பதிவானது. இதற்கு முன்னர் 53 ஓட்டங்கள் ஒரு அணி எடுத்ததே குறைந்தபட்சமாக இருந்தது.

பெங்களூருவில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. ரோஹித் மற்றும் ஜெய்ஸ்வால் இணைந்து இன்னிங்ஸை ஆரம்பித்தனர். ரோஹித் 2 ஓட் டங்களில் வெளியேறினார். கோலி மற்றும் சர்ப்ராஸ் கான் ஓட்டம் ஏதும் எடுக்காமல் வெளி யேறினர். ஜெய்ஸ் வால் 13 ஓட்டங்களில் ஆட்டமிழந் தார். கே. எல். ராகுல், ஜடேஜா மற்றும் அஸ்வின் ஆகியோர் முதல் பந்திலேயேஆட்டமிழந்து வெளியேறினர்.

ரிஷப் பண்ட் 20 ஓட்டங்கள், பும்ரா 1 மற்றும் குல்தீப் 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். 31. 2 ஓவர்களில் 46 ஓட்டங்களுக்கு இந்தியா சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது.

டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்திய அணியின் மூன்றாவது குறைந்தபட்ச ஓட்டம் இதுவாகும். கடந்த 2020இல் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக அடிலெய்டில் 36 ஓட்டங்களும், 1974இல் இங்கிலாந்துக்கு எதிராக லோர்ட்ஸில் 42 ஓட்டங்களும் எடுத்திருந்தது. சொந்த மண்ணில் டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்தியா எடுத்த குறைந்தபட்ச ஓட்டம் இதுவாகும். (எ)

# இரண்டாவது டெஸ்ட்; பாகிஸ்தான் பதிலடி

## டெஸ்ட் தொடரை சமப்படுத்தியது

முல்தான், ஒக். 19

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 152 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி முல்தானில் நடைபெற்றது. இதில் பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 366 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக கம்ரான் குலாம் 118 ஓட்டங்கள் எடுத்தார்.

இதையடுத்து இங்கிலாந்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கியது. அதிரடியாக விளையாடிய பென் டக்கெட் சதமடித்த நிலையில் 114 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அத்தோடு அந்த அணி முதல் இன்னிங்ஸில் 291 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. பாகிஸ்தான் சார்பில் சஜித் கான் 7 விக்கெட்களை வீழ்த்தினார். இதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் அணி தனது 2ஆவது இன்னிங்ஸை தொடங்கியது. பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்கள் சீரான இடைவெளியில் விக்கெட்களை பறிகொடுத்தனர். ஆகா சல்மான் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 63 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதனால் பாகிஸ்தான் அணி 10 விக்கெட்களையும் இழந்து 221 ஓட்டங்கள் எடுத்தது. இங்கிலாந்து தரப்பில் பஷீர் 4 விக்கெட்கள், ஜேக் லீச் 3 விக்கெட்கள் வீழ்த்தினர். இதன்மூலம் இங்கிலாந்து அணிக்கு 297 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இந்த நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து அணியில் பென் டக்கெட் 0, க்ராவ்லி 3 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இதனால் நேற்று முன்தினம் 3ஆம் நாள் முடிவில் இங்கிலாந்து அணி 2 விக்கெட்களை இழந்து 36 ஓட்டங்கள் எடுத்தது. 4ஆவது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது.

இங்கிலாந்து அணி பாகிஸ்தான் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தது. இங்கிலாந்து அணியில் பென் ஸ்டோக்ஸ் மட்டும் நிலைத்து விளையாடி 37 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இறுதியில் இங்கிலாந்து அணி 144 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது . இதனால் பாகிஸ்தான் அணி 152 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சிறப்பாக பந்துவீசி நோமன் அலி 8 விக்கெட்களை வீழ்த்தினார். இந்த வெற்றி மூலம் முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு பாகிஸ்தான் அணி பதிலடி கொடுத்ததோடு, 1 - 1 என்ற கணக்கில் இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரை சமப்படுத்தியது. (எ)

# ரவீந்திரா அபார சதம்

பெங்களூரு, ஒக். 19

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து வீரர் ரச்சின் ரவீந்திரா அபாரமாக துடுப்பெடுத்தாடி சதமடித்தார். இந்த நிலையில் நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 402 ஓட்டங்கள் குவித்துள்ளது.

இந்தியா - நியூசிலாந்து இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெங்களூருவில் உள்ள சின்னச்சாமி மைதானத்தில் நடைபெற்று வருகிறது. மழை காரணமாக முதல் நாள் ஆட்டம் கைவிடப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் போட்டி ஆரம்பமானது. இதில் இந்திய அணி 46 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. நியூசிலாந்து சார்பில் சிறப்பாக பந்துவீசிய மேத் ஹென்றி 5 விக்கெட்கள், வில்லியம் ஓரூர்க் 4 விக்கெட்கள், சவுதி ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து நியூசிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணி சார்பில் அதிகபட்சமாக ரச்சின் ரவீந்திரா 134 ஓட்டங்கள் எடுத்தார். இறுதியில் நியூசிலாந்து 402 ஓட்டங்களுக்கு 10 விக்கெட்களை இழந்து ஆட்டமிழந்தது. இந்தியா சார்பில் குல்தீப் யாதவ், ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர். இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 50 ஓட்டங்கள் எடுத்துள்ளது. (எ)

### மகளிர் ரி - 20 உலக கிண்ணம்

# தென்னாபிரிக்கா வெற்றி அவுஸ்திரேலியா அதிர்ச்சி



டுபாய், ஒக். 19

மகளிர் ரி - 20 உலகக் கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது தென்னாபிரிக்கா அணி.

9ஆவது மகளிர் ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள டுபாய் மற்றும் சார்ஜாவில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் டுபாயில் வியாழக்கிழமை நடைபெற்ற முதல் அரையிறுதியில் 6 முறை சம்பியனான அவுஸ்திரேலிய அணி, தென்னாபிரிக்காவுடன் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 20 ஓவரில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 132 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியில் அதிகபட்சமாக பெத் மூனி 44 ஓட்டங்களும், எல்லீஸ் பெரி 31 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதையடுத்து, 133 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென்னாபிரிக்கா களமிறங்கியது. தொடக்க வீராங்கனையாக களமிறங்கிய டஸ்மின் பிரிட்ஸ் 15 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க வீராங்கனை லாரா வோல்வார்ட் 42 ஓட்டங்களில் வெளியேறினார். தொடர்ந்து களமிறங்கிய அனேகே போஸ்ச் பொறுப்புடன் விளையாடி அரைச் சதமடித்து 74 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

இறுதியில், தென்னாபிரிக்கா 2 விக்கெட்கள் இழப்புக்கு 135 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னி...

மூவரால் சட்டத்தரணி சனத் விஜேவர்தனவின் ஊடாக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், வன்னி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி உள்ளிட்ட சிலர் இந்த மனுவின் பிரதி வாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

தாம் வன்னி மாவட்டத்திற்காக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியிடம் வேட்புமனுவை கையளித்ததாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். அந்த சந்தர்ப்பத்தில் குறித்த வேட்புமனு முறையாக முன்வைக்கப்படவில்லை என குறிப்பிட்டு அதனை ஏற்றுக்கொள்வதை அவர் நிராகரித்ததாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து ஆவணங்களும் முறையாக முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், தமது வேட்புமனு நிராகரிக்கப்பட்டமை சட்டத்திற்கு முரணானது என்பதால் அந்த தீர்மானத்தை வலுவற்றதாக்கும் ரிட் எழுத்தாணையை பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

அத்துடன், மனு மீதான விசாரணைகள் நிறைவடையும் வரை வன்னி மாவட்டத்திற்காக நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள வாக்கெடுப்பை இடைநிறுத்தும் இடைக்கால தடையுத்தரவையும் பிறப்பிக்குமாறும் மனுதாரர்கள் தமது மனுவில் கோரியுள்ளனர். (அ)

## கடன்...

பற்றி இப்போது அதிகம் பேசப்படுகிறது. நாம் கடன்பெற மாட்டோம் என மேடைகளில் பேசியோர் இன்று கடன் பெற்றுக்கொள்கின்றனர்.

உண்மையில் அரச வருமானத்தை அதிகரிக்காமல் கடன் பெற்றுக்கொள்வது பாரிய ஆபத்தை விளைவிக்கும். எம்மிடமுள்ள அந்நிய செலாவணி இருப்பை அதிகரித்துக்கொள்ளதல் அவசியமாகும். அவ்வாறில்லாமல் தொடர்ச்சியாக கடன் பெற்றுக்கொள்ளும்போது மீள செலுத்துவதற்கான இயலுமையை நாம் இழந்துவிடுவோம்.

இந்த யதார்த்தமான சூழ்நிலையை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும்.

மேலும், நாட்டில் தற்போது அரிசிக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அரிசி வியாபாரத்தை தன்னகப்படுத்தியிருக்கும் ஒருசிலரின் செயற்பாடுகளே இதற்குக் காரணம். ஆயினும் இந்த விடயம் குறித்து ஜனாதிபதியோ அமைச்சர்களோ இதுவரை எந்தக் கருத்தையும் முன்வைக்கவில்லை-என்றார். (அ)

## ஈஸ்டர்...

குழுக்களை அமைக்குமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை நாங்கள் கேட்டுக்கொள்ள வில்லை எனவும் அவர் கூறினார்.

இதன் காரணமாக உதயகம்மன்பில வேண்டுகோள் விடுத்துள்ள அறிக்கைகள் குறித்து நாங்கள் ஆர்வம் கொண்டிருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

பிவித்துரு ஹெல உறுமய தலைவர் தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்த வேண்டாம். சி.ஐ.டியினர் விசாரணைகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம் என அவர் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஓய்வுபெற்ற சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி செனிவரட்ண நியமிக்கப்பட்டுள்ளது குறித்தும் ஷானி அபயசேகர மீண்டும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறித்தும் எங்களுக்கு எந்த பிரச்னையு மில்லை என அருட்தந்தை சிறில் காமினி பெர்ணாண்டோ தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பேரழிவு குறித்து பெருமளவு அறிக்கைகள் வெளியாகியுள்ளன. சி.ஐ.டியினர் இது குறித்து பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்கட்டும். அவர்கள் உண்மையை கண்டுபிடிப்பார்கள் என நம்பிக்கை கொண்டுள்ளோம் என அவர் குறிப்பிட்டார். (அ)

## சங்குபிட்டி...

நடந்து செல்ல வேண்டிய தேவைப்பாடு உள்ளதாகவும், மேலும் வைத்திய சாலைக்கு செல்ல வேண்டிய நோயாளர்களுக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ் மாவட்டபதில் அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அறிவித்துள்ளார். மேலும், கனகர வாக னங்கள் போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டுள்ளதால் மாற்றுப் பாதையினை பயன்படுத்துமாறும், பாதைக்கான திருத்த வேலைகள் விரைவாக பூர்த்தி செய்யப்படும் பட்சத்தில் குறித்த தினத்திற்கு முன்னர் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-5)

## காணாமல்...

பணிமனையின் உறுப்பினர் தியாகராஜா யோகராஜா, நிறைவேற்று பணிப்பாளர் மூத்த சட்டத்தரணி ஜெகநாதன் தற்பரன் ஆகியோர் தலைமையில் இந்த விசாரணைகள் நடைபெற்றன.

இதன் போது கருத்துத் தெரிவித்த காணாமல் போனோர் பற்றிய பணிமனையின் உறுப்பினர்,

"காணாமல் போனோர் விவரங்கள் இதுவரையில் 21 ஆயிரத்து 630இற்கு மேற்பட்ட விண்ணப்பப் படிவங்கள் கிடைத்துள்ளன. விண்ணப்பப் படிவங்களில் பொலிஸார் மற்றும் இராணுவம் உள்ளிட்ட முப்படையினரும் உள்ளனர்.

14 ஆயிரத்து 988 விண்ணப்ப படிவங்கள் விசாரணைக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. 6 ஆயிரத்து 688 விண்ணப்ப படிவங்கள் பூர்வாங்க விசாரணைகள் நடைபெற்று முடிக்கப்பட்டுள்ளன. இதில் 3 ஆயிரத்து 800இற்கும் மேற்பட்ட விண்ணப்ப படிவதாரிகளுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவு அவர்களுக்கான இழப்பீட்டு கொடுப்பனவு அல்ல. அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவே வழங்கப்பட்டது. இதுவரையில் செய்து முடிக்கப்பட்ட பூர்வாங்க விசாரணைப்படி 3 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களுக்கான காணாமல் போனோர் சான்றிதழ் வழங்க பதிவாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மேலதிக விசாரணைக்காக 830 விண்ணப்பப் படிவங்கள் தொடர் விசாரணைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 17 பேரின் விண்ணப்பப் படிவங்களில் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது முழுமையாக கண்டறியப்பட்டுள்ளது. இதில், மூவர் உயிருடன் இல்லாததால் இவர்களுக்கு என்ன நடந்தது என்றறியவும் ஏனைய 14 விண்ணப்பப் படிவங்கள் தொடர்பில் விவரங்களை அறியவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## அடிப்படை...

சிறைச்சாலை வளாகத்தில் அமைந்துள்ள ஏதிலிகளுக்கான சிறப்பு முகாமில் இலங்கை உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 110 இற்கும் மேற்பட்டவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்குள்ள இலங்கைத் தமிழர்கள் வழக்கு தொடர்பாக நீதிமன்றத்துக்குச் செல்லவோ, வைத்தியசாலைக்குச் செல்லவோ, நீதிமன்றம் மற்றும் தூதரங்கள் தொடர்பான ஆவணங்களில் கையெழுத்திடவோ மாவட்ட நிர்வாகம் தரப்பில் மறுப்பு தெரிவிப்பதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையிலேயே, தங்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதைக் கண்டித்தும், வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டு மற்றும் தண்டனைக் காலம் முடிவடைந்த தங்களை விடுவிக்கக் கோரியும் 10 இற்கும் மேற்பட்ட இலங்கை ஏதிலிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில் சிலர் மரத்தின் மீது ஏறி தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# வரிச்சுமையை குறைக்க அரசால் ஏன் முடியவில்லை?

## சஜித் பிரேமதாஸ கேள்வி

கொழும்பு, ஒக். 19

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி வரிச்சுமையை குறைப்பதற்கு ஏன் அரசாங்கத்தால் முடியாது - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அவிசாவளை தேர்தல் தொகுதி கட்சி செயல்பாட்டாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள நேரடி மற்றும் மறைமுக வரிகளை குறைக்க அரசாங்கத்தால் முடியாதுபோயுள்ளது. மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வரிச்சுமையை குறைக்கும் புதிய பயணத்தை நாட்டு மக்கள் எதிர்பார்த்தாலும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் புதிய அரசாங்கம் இதுவரை கலந்துரையாடிய போதும், விதிக்கப்பட்ட வரிகள் அவ்வாறே அறவிடப்படுகின்றன. தற்போதைய அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டை அவ்வாறே தொடர்கிறது. தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் மறந்துவிட்டது.

ஜனாதிபதியும் அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியத்துடன் நடத்திய கலந்துரையாடல் என்ன? என்ன நடந்தது என்பதை அறிய விரும்புகிறோம். நேரடி மற்றும் மறைமுக வரிகளை குறைக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்பதையும் அறிய விரும்புகிறோம். இதேபோன்று நாம் ஆட்சிக்கு வந்தால் ஐ. எம். எவ். உடன்படிக்கையில் திருத்தம் செய்து, வரிச்சுமையை குறைப்பதுடன், வரிச்சுமையை இல்லாதொழிப்பேன்- என்றார்.

(ஐ)

## ஆலயத்தில்...

வருவதாவது,

அந்தப் பகுதியிலுள்ள ஆலயம் ஒன்றில் பாடலை ஒலிபரப்புவதற்காக மின்னிணைப்பு பணியில் அவர் ஈடுபட்டிருந்தார். அந்தச் சமயம் மின்சாரத்தால் தாக்குண்ட அவரை மருத்துவமனைக்கு கொண்டுசென்றபோது, ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவரின் சடலம் உடல்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-05)

## பருப்பு...

வகையில் இந்தப் பொருட்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சரான ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் வழிகாட்டுதலின்படி இந்த வரி விதிப்பு நடைமுறைக்கு வந்துள்ளது.

இதன்படி, மைசூர் பருப்பு மற்றும் மஞ்சள் பருப்புக்கு ஒரு கிலோவுக்கு 25 சதம் சிறப்பு வரி அறிவிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று மாசி கருவாடு மற்றும் அதற்கு ஈடான பொருட்களுக்கு ஒரு கிலோவுக்கு 302 ரூபாயும் முள் நீக்கப்பட்ட மீன் அல்லது உறைய வைக்கப்பட்ட மீனுக்கு கிலோ ஒன்றுக்கு 10 வீதம் அல்லது 400 ரூபாயும் வரியாக அறவிடப்படும். (ஐ)

## விசேட...

உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்ல சட்டவிதிகள் அமைக்கப்பட்டுள்ளன தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவிக்கையில்,

விசேட தேவையுடைய வாக்காளர்களின் உதவியாளர்கள் 18 வயதை பூர்த்தி செய்த ஒருவராக இருத்தல் வேண்டும் என்பதோடு தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் அல்லாதவராக இருத்தல் வேண்டும்.

மேலும், விசேட தேவையுடைய வாக்காளர்களின் உதவியாளர்கள், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் அதிகாரமளிக்கப்பட்ட முகவராகவோ, பிரதேச முகவராகவோ அல்லது வாக்கெடுப்பு நிலையத்தின் முகவராகவோ இருத்தல்கூடாது.

விசேட தேவையுடைய வாக்காளர்கள் தங்களது உதவியாளர்களை உடனழைத்து செல்வதற்குத் தகுதி சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த தகுதி சான்றிதழுக்கான விண்ணப்பங்களை மாவட்ட தேர்தல் பணிமனைகளில் பிரதேச செயலகங்களில், கிராம அலுவலர் அலுவலகங்களில் அல்லது www.election.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் - என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

## தமிழரின்...

மாணவர் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

நேற்று மாணவர் ஒன்றியத்தினர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

கடந்த 2010, 2015, 2019ஆம் ஆண்டு என மூன்று பாராளுமன்ற தேர்தல்களை நாங்கள் யுத்தத்துக்கு பின்னர் எதிர்கொண்டிருந்தோம். அந்த மூன்று பாராளுமன்றத் தேர்தல்களிலும் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகளும் கட்சிகளினுடைய ஏமாற்று வேலைகளும் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது - அது மறுக்க முடியாது.

அந்தவகையில் இந்தமுறை வடக்கு - கிழக்கில் பெரும் மாற்றம் ஏற்பட வேண்டுமென்ற அலை இளைஞர்கள் மத்தியில் உருவாகியுள்ளது. தென்னிலங்கையிலே ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் வடக்கு - கிழக்கிலும் ஏற்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனாலும் நாங்கள் எங்களுடையவர்களையே தெரிவு செய்ய வேண்டும். அந்த மாற்றம் தென்னிலங்கை தரப்பை ஆதரிக்கக்கூடாது.

எங்களுடைய வடக்கு - கிழக்கு தமிழர்கள், தமிழ்த் தேசியம் என்ற ரீதியிலேயே நின்று - தமிழர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கக்கூடியவர்களை தெரிவு செய்ய வேண்டும் என்பதையே கேட்டுக்கொள்கின்றோம். தென்னிலங்கை தரப்புகளை புறக்கணித்து இந்தத் தேர்தலிலும் எமது உரிமைகளை பறைசாற்ற வேண்டும்.

எங்களுடைய அரசியல் கட்சிகளும் சிந்தித்து செயல்பட வேண்டும்.

யுத்தம் நிறைவடைந்து 15 ஆண்டுகள் கடந்தும் தமிழர்களின் அரசியல் தீர்வு குறித்து எந்த ஒரு கட்சியும் தீர்வு திட்டத்தை முன்னகர்த்திக் கொண்டு செல்லவில்லை என்பது மிகவும் ஒரு கவலைக்கிடமான - வெட்கப்பட வேண்டிய விடயம். இந்த நேரத்திலாவது தமிழ் மக்களான நாங்கள் கடந்த காலத்தில் எம்மை ஏமாற்றி அரசியல் செய்தவர்களை புறக்கணித்துவிட்டு, சரியான தலைமைத்துவத்தை பாராளுமன்றத்துக்கு அனுப்பி எமது உரிமையை பறைசாற்ற வேண்டும்.

இந்த அடிப்படையில் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தமது வாக்குகளை தமிழ் தரப்புகளுக்கு அளிக்க வேண்டுமே தவிர, மாறாக தென்னிலங்கை தரப்புக்கு அளிக்கக்கூடாது - என்றனர். (ஐ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மட்டுப்படுத்தப்பட்ட செலவை மட்டுமே வேட்பாளர்கள் மேற்கொள்ளவேண்டும்!

## தேர்தல் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு



இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் ஆணைக்குழுவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இது குறித்து விளக்களித்தார்.

கொழும்பு, ஒக். 19

**தேர்தல் சட்டத்துக்கு அமைய அனைத்து வேட்பாளர்களும் தமக்குரிய மட்டுப்படுத்தப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்- ஏதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான மட்டுப்படுத் தப்பட்ட செலவினம் குறித்து நாம் அறிவித்துள்ளோம். 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்துக்கு அமைவாக இந்த விடயம் வர்த்தமானியில் வெளி யிடப்பட்டுள்ளது.

அதற்கமைய 22 தேர்தல் மாவட்டங்களிலும் வாக்காளர் ஒருவருக்கு வேட்பாளர் ஒருவரால் செலவுசெய்யக்கூடிய தொகை குறிப்பிடப்பட்டுள்ளது.

உதாரணமாக, திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் அதிக பட்ச மாக வாக்காளர் ஒருவருக்கு 115 ரூபாவை செலவு செய்யலாம்.

வன்னி தேர்தல் மாவட்டத்தில் குறைந்த பட்சமாக 82 ரூபாவை செலவுசெய்ய முடியும்.

அதேபோல, செலவு செய்யும் தொகையில் 60 வீதத்தை வேட்பா ளரின் சொந்த நிதியிலிருந்து ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். மேலும், 39.5 வீதமான செலவை அரசியல் கட்சிக்கு அல்லது சுயேச் சைக் குழுக்களால் ஏற்றுக்கொள்ள முடியும். மிகுதி 0.5 வீதத்தை தேசியப் பட்டியில் உறுப்பினருக் கான செலவினமாக கருத முடியும்.

இது தொடர்பில் விளக்கம் தேவைப்படின் தேர்தல் ஆணைக் குழுவின் மேலதிக ஆணையாளரு டன் தொடர்பு கொண்டு தகவல் களைப் பெறலாம்.

இதேவேளை, தேர்தல் இடம் பெற்ற பின்னர் உரிய காலப்பகு திக்குள் வேட்பாளர்களும் கட்சிக ளும் சுயேச்சைக் குழுக்களும் தமது வரவு-செலவு அறிக்கையை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி யிடம் கையளிக்கவேண்டியது கட்டாயமாகும் - என்றார். (அ)

# இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவுக்கு இதுவரையில் 3,045 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக். 19

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு வுக்கு பொதுமக்களிடமிருந்து இதுவரை 3,045 முறைப் பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த வருடத்தின் செப்ரெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் இந்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இவற்றுள் 811 முறைப்பாடுகளை விசாரணை செய்யு மாறு இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழு உத்தரவிட்டுள்ளதுடன் சுற்றிவளைப்பில் 67 சந் தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுள் 20 பொலிஸ் உத்தியோகத்தர்களும் அடங்குகின்றனர்.

கிடைத்த 620 முறைப்பாடுகள் இலஞ்ச ஊழல் சட் டத்திற்கு புறம்பான வகையில் அமைந்துள்ளதால் அவை குறித்த நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. (அ)

# பட்டு சேலைகளுக்குள் ஐஸ் கடத்தியவர் கைது!

கொழும்பு, ஒக். 19

பட்டுச் சேலைகளுக்குள் சுமார் ஒரு கிலோ ஐஸ் போதைப்பொருளை மறைத்து நாட்டுக்குள் கொண்டு வர முற்பட்ட, இந்தியப் பிரஜையொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய் யப்பட்டுள்ளார்.

மலேசியாவிலிருந்து வந்த யூ.எல் 315 என்ற சிறிலங் கன் விமானத்தில் வந்த இந்தியப் பிரஜையின் பயணப் பொதிக்குள்ளிருந்த பட்டுச் சேலைகளுக்குள், 01 கிலோ ஐஸ் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந் ததை சுங்கத்துறை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த போதைப்பொருளின் பெறுமதி சுமார் 25 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

போதைப்பொருளுடன் சந்தேகநபர் மேலதிக விசார ணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவராக பேராசிரியர் கபில செனவிரத்ன

கொழும்பு, ஒக். 19

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்ட சிரேஷ்ட பேராசிரி யர் கபில செனவிரத்ன தனது கடமை களை நேற்று பொறுப் பேற்றுக்கொண் டார்.

சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமர துங்க அண்மையில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு வின் தலை வர் பதவியில் இருந்து விலகியதை அடுத்து, சிரேஷ்ட பேராசிரியர் கபில செனவிரத்ன அந்தப் பதவிக்கு நியமிக் கப்பட் டமை குறிப்பிடத்தக்கது.



# மாவட்டங்களுக்கு இடையே பன்றி கொண்டுசெல்ல தடை!



கொழும்பு, ஒக். 19

பன்றிகள் இடையே பரவும் வைரஸ் தொற்றினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கால் நடை உற்பத்தி, சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்தார்.

மேல் மற்றும் வடமேல் மாகாணங்கள் உள்ளிட்ட மேலும் சில மாகாணங்களில் இந்த வைரஸ் பரவி வருதாக அவர் குறிப்பிட்டார்.

வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசி செலுத்தம் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (அ)

# அடிப்படைச் சம்பளமாக, 2 ஆயிரம் ரூபா ஜனாதிபதி பெற்றுக்கொடுக்கவேண்டும்

## ஜீவன் தொண்டமான் கோரிக்கை

கொழும்பு, ஒக். 19

தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு, அடிப்படை சம்பளமாக, 2 ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுக்க வேண்டும் என, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித் துள்ளார்.

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு, தாம் ஆயிரத்து 350 ரூபா அடிப்படை சம்பளத்தை பெற்றுக்கொடுத்ததாகவும், தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க, பிரசார வேளையில் அறிவித் தது போன்று, அடிப்படை சம்பளமாக, 2 ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் அவர் கோரினார்.

நுவரெலியா தலவாக்கலை பகுதியில் இடம்பெற்ற, தேர்தல் பிரசார கூட்டத்தில், இவ்வாறு குறிப்பிட்டார்.

# அரசாங்கத்தால் நிதி மானியம் வழங்கப்படுவதாக நிதி மோசடி

## பொதுமக்களே அவதானம்

கொழும்பு, ஒக். 19

அரசாங்கத்தால் நிதி மானியங்கள் வழங்கப்படுவதாக கூறி, நிதி மோசடி இடம்பெறுவதாக கணினி அவசர நிலைப் பதிலளிப்புக் குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து, கணினி அவசரநிலைப் பதிலளிப்புக் குழுவின் சிரேஷ்ட பொறியியலாளர் சாருகா தமுனு பொல கூறுகையில்-

50,000 ரூபா மானியம் வழங்குவதாக உறுதியளிக்கும் போலி செய்திகளை பெறுவது குறித்து, பொதுமக் களிடமிருந்து பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்தச் செய்திகளில் உள்ள எந்தவொரு இணைப்பு களையும் கிளிக் செய்வதைத் தவிர்க்கவேண்டும்.

மேலும் இந்த இணைப்புகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டாம் - என்றார். (அ)

# பாராளுமன்ற தேர்தல் குறித்து இதுவரை 206 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக். 19

பொதுத் தேர்தல் தொடர்பில் இதுவரை 206 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் 26ஆம் திகதி முதல் தேர்தல் சட் டங்களை மீறிய முறைப்பாடுகளாக 206 முறைப்பாடுகள் இவ்வாறு பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

ஆனால், இதுவரை எந்தவொரு வன்முறையும் பதிவாகவில்லை. கிடைக்கப்பெற்ற 206 முறைப்பாடு களில் 130 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ள தாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, விருப்பு இலக்கங்கள் வெளியிடப்பட் டுள்ளதால், விருப்பு வாக்குச் சண்டையை உருவாக்கா மல் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுப்பது அனைத்து தரப்பினரின் பொறுப்பாகும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

வன்முறைகளற்ற நியாயமான தேர்தலை நடத்துவ தற்கு அனைத்துக் கட்சிகளும் சுயேச்சை குழுக்களும் ஆதர வாளர்களும், பொது மக்களும் ஒத்துழைப்புகளை வழங் குவது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

# வேட்பாளர்கள் பிரசார வரவு-செலவு அறிக்கை சமர்ப்பிப்பது கட்டாயம்!

## பவ்ரல் அமைப்பும் வலியுறுத்தல்

கொழும்பு, ஒக். 19

பொதுத் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட் பாளர்களும் பிரசாரத்துக்கான தமது வரவு - செலவு அறிக்கையை சட்டத்தின் பிரகாரம் கட்டாயம் சமர்ப் பிக்கவேண்டும் என சுதந்திரமானதும் நியாயமான துமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு (பவ்ரல்) தெரிவித்துள்ளது.

அவ்வமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எண்ணாயிரத்து 821 பேர் போட்டியிடுகின்றனர். வேட்பாளர்களுக்கிடையே பாரிய போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும் எண்ணாயிரத்து 625 பேர் தோல்விய டைவார்கள்.

தேர்தலில் போட்டியிடும் அனைவரும் தமது வரவு - செலவு அறிக்கையை தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதேபோல் அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களும் தமது வரவு - செலவு அறிக் கையை கையளிக்க வேண்டும்.

அவ்வாறு சமர்ப்பிக்காத வேட்பாளர்களின் வாக்குரி மையும் தேர்தலில் போட்டியிடும் உரிமையும் மூன்று வருட காலங்களுக்கு இடைநிறுத்தப்படும். சட்டவாக்க சபைக்கு தெரிவாகும் உறுப்பினர்கள் என்ற அடிப்படை யில் அதற்குப் பொருத்தமான வகையில் வேட்பாளர்கள் செயற்படவேண்டும் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org